# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## ஆண்டறிக்கை - 2012

# தவிசாளரின் செய்தி

தாபனத்தின் நிதிசார் மற்றும் நிதிசாரா செயற்பாடுகளைத் தெரிவிக்கும் பிரதான கருவியான ஆண்டறிக்கையை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தரமான ஆண்டறிக்கையொன்றின் நோக்கமானது, தாபனத்தின் நிதிசார் பெறுபேறுகளை மட்டும் வெளிப்படுத்தாது, தாபனம் மற்றும் அதன் விழுமியங்கள், பெறுபேறுகள், சமுதாயத்திற்கான பங்களிப்புகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் அதன் வாசகர்கள் மத்தியில் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கக் கூடியவாறான தரவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தையும் நியாயப்படுத்துகிறது.

2012 ஆம் ஆண்டில் அதிகாரசபை, போட்டித் தன்மைக்கு எதிரான (போட்டி எதிர்ப்பு) நடைமுறைகள் மற்றும் அங்காடி வியாபாரிகளிடமிருந்து பாவனையாளர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் அவர்களின் நன்மைக்கென அதிகாரசபையின் சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அதிகளவு ஊழியர்களை உள்வாங்குவதற்கென நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பொருளாதார ரீதியில் அதிகூடியதும், சமூக ரீதியில் நியாயமானதும் விரும்பத்தக்கதுமான சந்தைப் பெறுபேறுகளுக்கு தேவையான தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளல் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் முன் நிபந்தனையாக போட்டித்தன்மை உள்ளது என்பதை அதிகாரசபை நம்புகிறது. பயனுறுதிமிக்க போட்டித் தன்மை கொள்கையானது பயன்பெறும் பாவனையாளர்களுக்கானதொரு மதிப்பீட்டுக் கருவியாகும். சட்டத்துடன் கூட்டிணைக்கப்படவுள்ள விளக்கமான போட்டித்தன்மைக் கொள்கையொன்றை நாங்கள் முன்மொழிவு செய்துள்ளோம். இது உற்பத்தி அல்லது விற்பனையை மட்டுப்படுத்துதல், நியாயமற்ற விலை அதிகரிப்புகளை மேற்கொள்ளுதல், நியாயமற்ற வியாபார நிபந்தனைகளை அமுல்படுத்துதல், அநீதியான விலை மாற்றங்களில் ஈடுபடுதல், விலையிடுதலில் அதிகளவு நன்மை பெறுதல் மற்றும் சம்பந்தப்படாத பொருட்களின் விற்பனைக்காக சில பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய ஆதிக்கமுடைய பொறுப்பேற்றல்களின் துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கமாட்டாது. பண்டங்களின் உற்பத்தி, விநியோகம், பகிர்ந்தளித்தல், சுவீகரித்தல் அல்லது கட்டுப்பாடு அல்லது சேவை வழங்கல்கள் அடங்களாக தடை செய்யும் உடன்படிக்கைகளை மேற்கொள்வதானது, பொதுமக்களின் ஆர்வத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் சட்டம் நிறைவேற்றப்படுவதற்காக நாங்கள் காத்திருக்கிறோம். இவ்வருடத்தின் போது நாங்கள் வெளியீடு செய்திருக்கும் பணிப்புரைகள் பாவனையாளரின் ஆர்வங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாகும்.

பொதுமக்களின் விருப்புகளுக்கு எதிரான போட்டி பற்றிய விடயங்கள் ஆராயப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருப்பதன் முக்கியத்துமானது அதிகாரசபைக்கு முறைப்பாடாக ஆற்றுப்படுத்தப்பட்டிருந்த போட்டிக்கு எதிரான நடவடிக்கைகளை நாங்கள் வெற்றிகரமாக வெளிப்படுத்தியிருந்தமையாகும்.

அறிவூட்டல்கள், பயிற்சி பட்டறைகள் (செயலமர்வுகள்) மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் பொருளாதாரத்தில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக நாங்கள் முன்மொழிவு செய்துள்ளோம்.

2012 ஆம் ஆண்டின் போது, பால்மா, சீமெந்து மற்றும் வாயு எரிபொருள் ஆகியவை தொடர்பாக உலகச் சந்தை விலைகளின் தளம்பல் / ஏற்ற இறக்கம் பற்றி முழுமையான ஆய்வை மேற்கொண்டு, மேற்படி மூன்று அத்தியாவசியப் பண்டங்களுக்கான சிறிதளவு விலை அதிகரிப்புக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அனுமதிக்க வேண்டியிருந்தது. மாறாக, உலகச் சந்தையில் வாயு எரிபொருள் விலைகளின் அதிகரிப்பினால் வாயு எரிபொருள் விலையை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிப்பதற்கு நாங்கள் அனுமதிக்க வேண்டியிருந்தது.

2012 ஆம் ஆண்டின்போது கிடைக்கப்பெற்ற 97.6 சதவீதமான முறைப்பாடுகளை நாங்கள் கையாண்டு முடிவுறுத்துவதற்கு முடிந்தது. மேலும், சட்டத்தின் ஏற்பாடுகளை மீறிய வரத்தகர்களுக்கெதிராக அதிகாரசபையினால் தொடுக்கப்பட்ட வழக்குகளை வெற்றிகரமாக தொடரக்கூடியதாக இருந்ததுடன் சட்டத்திற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் ‘‘அதே இடத்தில் குற்றப்பணம் அறவிடுதல்’’ பற்றிய ஏற்பாட்டை உள்ளடக்குவதற்கான தடை நீக்கத்தை சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுமிருந்தது.

அத்துடன், இலங்கை கட்டளைகள் நிறவனம் மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இறக்குமதி பரிசீலனைத் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள நுழைவு இடங்களில் தரம் குறைந்த பண்டங்கள் வந்தடைவதை நாங்கள் தவிர்க்கக்கூடியதாக இருந்தது. அத்துடன், அத்தகைய 146 சந்தர்ப்பங்களை நாம் வெற்றிகரமாகக் கண்காணிக்கக்கூடிய நிலையில் இருந்தது.

இத்தகைய சிறந்த பெறுபேறுகளை எய்துவதற்கு உதவி புரிந்த அனைத்து மட்டங்களிலுமுள்ள ஊழியர்களின் அயராத உழைப்பிற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

மேற்படி வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு எப்போதும் பக்கபலமாக இருந்து உதவியளித்த பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ள எனது சக ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவதோடு, அவர்களின் பங்களிப்பு இன்றி நாங்கள் வெற்றியாளர்களாகியிருக்க முடியாது என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.

மேலும், இத்தகைய வெற்றியை அடைவதற்கு, ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் அங்கீகாரங்கள் வழங்கிய கௌரவ அமைச்சர், செயலாளர் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகட்டும்.

முறைப்பாட்டாளர்கள் / பாவனையாளர்கள் ஆகியோரின் முறைப்பாடுகள் கையாளப்பட்ட முறை மற்றும் அவர்களுக்கு கிடைத்த நிவாரணம் ஆகியவை தொடர்பாக எமது முயற்சிகளுக்கு வெகுமதியளிக்கும் முறையில் அவர்களது பூரண திருப்தியை தெரிவிக்கும் பாராட்டுதல்கள், நன்றி நவிலல் கடிதங்கள் ஆகியவற்றிற்கும் நான் இறுதியாக நன்றியைத் தெரிவிக்கிறேன்.



றூமி மர்ஸூக்

தவிசாளர்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## எமது நோக்கு

ஒழுக்கமான வணிக கலாசாரத்தினுள் நன்கு பாதுகாக்கப்பட்ட பாவனையாளர்கள்

## எமது பணி

பாவனையாளர் வலுவூட்டல், வியாபார ஒழுங்கு விதிகள், ஆரோக்கியமான போட்டிகளை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் நுகர்வோரின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்தல்

## எமது கூட்டிணை இலக்குகள்

1) வியாபார ஒழுங்குகள் மூலம் மகிழ்ச்சியான பாவனையாளர்கள்

2) நியாயமற்ற வியாபார நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு நிவாரணமளித்தல்

3) கல்வி, விழிப்புணர்வு மூலம் நுகர்வோரை வலுவூட்டல்

4) எதிர்மறையான போட்டித் தன்மைமிக்க வியாபாரப் பழக்க வழக்கங்களிலிருந்து வியாபாரிகளையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல் மற்றும் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்தல்

5) ஆற்றலை மேம்படுத்தல் மூலம் நிறுவன ரீதியான அபிவிருத்தி

## எமது கூட்டிணைப் பெறுமானங்கள்

- **நம்பிக்கை**

  தொடர்ச்சியான செயலாற்றுகையைப் பேணல் மற்றும் தங்கியிருத்தலை உறுதிப்படுத்தல்

- **நேர்மை, நியாயம்**

  சகல செயற்பாடுகளின் போது நேர்மையாகவும் நியாயமாகவும் சரியாகவும் நடந்துகொள்ளல்

- **வகைப்பொறுப்புக் கூறல்**

  எவ்விதமான செயற்பணிகளை ஆற்றிய பொழுதிலும் அதில் வெளிப்படைத் தன்மை, வகைப்பொறுப்புக் கூறல், பொறுப்புடைமை ஆகியவற்றைப் பேணல்

- **கூட்டுப் பொறுப்பு**

  முறையான தொடர்பாடல், நெகிழ்சித் தன்மை ஆகியவற்றின் மூலம் ஒருவரை ஒருவர் நம்புதல், மதித்தல், பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்தல், பொது இலக்கை அடைதல் ஆகியவற்றின் நிமித்தம் அனைத்து ஊழியர்களும் கூட்டாக செயற்படல்

- **அங்கீகாரம்**

  ஊழியர்களது சிறப்பான செயலாற்றுகைகளை விதந்து பாராட்டுதல்

- **அர்ப்பணிப்பு**

  வழங்கிய செயற்பணியை வெற்றிகரமாக அடைவதற்கான அர்ப்பணிப்பு

- **பதிலிறுப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்**

  சேவைகளை வழங்குவதற்கான விருப்பமும் தயார் நிலையும்

- **ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கத்தன்மை**

  சகல அம்சங்களிலும் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்படும் வகையில் புதிய கருத்துகளை உருவாக்கல்.

2ஆம் மாடி

கூ மெ செயலக கட்டிடம்

இல. 27, வொக்ஸல் வீதி,

கொழும்பு - 02.

25.09.2013

கௌரவ கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர்

8வது மாடி

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன செயலகக் கட்டிடம்

கொழும்பு – 02

கௌரவ அமைச்சர் அவர்கட்கு,

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14(2) இன் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவினம் பற்றிய கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றுடன் 2012 ஆம் வருடத்துக்கான ஆண்டறிக்கையையும் நான் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

ரூமி மர்ஸுக்

தவிசாளர்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## ஆண்டறிக்கை -2012

உள்ளடக்கங்கள்


| | பக்கம் |
|---|---|
| 1. எம்மைப் பற்றி - - - - - - - - - - | 9 |
| 1.1 அறிமுகம் - - - - - - - - - - | 9 |
| 1.2 அதிகாரசபை யாப்பு - - - - - - - - - | 9-10 |
| 1.3 அதிகாரசபை பணியாட்டொகுதி - - - - - - - | 11 |
| 1.4 பாவனையாளர் அலுவல்கள் பேரவை- - - - - - - | 12 |
| 2. அதிகாரசபையின் குறிக்கோள்கள் - - - - - - - | 13 |
| 3. அதிகாரசபையின் பணிகள் - - - - - - - - - | 14-15 |
| 4. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை/ பாவனையாளர் அலுவல்கள் - - பேரவை செயலாற்றுகை -2012 | 16-39 |
| 5. 2012 டிசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று - | 40-41 |
| 6. 2012 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகை - பற்றிய கூற்று - | 42-45 |
| 7. 2012 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்துக்கான காசுப் பாய்ச்சல் கூற்று - | 46-59 |
| 8. 2012 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்துக்கான கணக்காய்வாளர் - தலைமை அதிபதியின் அறிக்கை | 60-74 |
| 9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றி தவிசாளரின் - - கருத்துரைகள் | 75-87 |

# எம்மைப் பற்றி

## 1.1 அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், 1987ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம், 1950 ஆம் ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகியவற்றை நீக்கியதன் மூலம் 2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தினால் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் முன்னுரையின் பிரகாரம், வியாபாரம் மற்றும் பண்டங்களின் விலைகள் மற்றும் சேவைகளை ஒழுங்காக்குதல் மற்றும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கும் வரையறையுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்கும் எதிராக வரத்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல் ஆகியவை மூலமாக பாவனையாளர்களுக்கான சிறந்த பாதுகாப்பை வழங்குவதே பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முழுமையான நோக்கமாகும். அத்துடன், சாத்தியப்படுமிடமெல்லாம் போட்டியான விலையிடலை ஊக்குவிப்பதற்கும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு மத்தியில் ஆரோக்கியமான போட்டியை உறுதி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.2 அதிகாரசபை யாப்பு

சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அதிகாரசபையானது தவிசாளர் ஒருவரையும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான தகைமைகள் மற்றும் அனுபவத்தை உடைய ஆட்களிடையே இருந்து, அமைச்சரினால் நியமிக்கப்படும் பத்திற்குக் குறையாத வேறு உறுப்பினர்களையும் கொண்டமைந்துள்ளது.

## அதிகாரசபை உறுப்பினர்கள் – 2012

2012 ஆம் ஆண்டிறுதியில் உள்ளவாறு பதவி வகிக்கும் உறுப்பினர்களின் பெயர்கள்:

| | |
|---|---|
| திரு. றூமி மர்ஸூக் | தவிசாளர் |
| திரு. மில்ரன் அமரசிங்க | முழுநேர உறுப்பினர் |
| திரு. சுனில் ஜயவீர | முழுநேர உறுப்பினர் |
| மேஜர் ஜெனரல் நிமல் ஏ. ஜயசூரிய | முழுநேர உறுப்பினர் |
| மேஜர் ஜெனரல் பி. சந்ரவன்ச | உறுப்பினர் |
| வண. ரெக்காவ ஜினரத்ன தேரர் | உறுப்பினர் |
| Ms. சந்ரா ஏக்கநாயக்க | திறைசேரி பிரதிநிதி |
| திரு. சுகத் மொகான் பிராங் த சில்வா | உறுப்பினர் |
| திரு. துஷான் சூசா | உறுப்பினர் |
| திரு. ஏ.ஜி.பி. கித்சிறி | உறுப்பினர் |
| திரு. வினோத் தன்சிங்கனி | உறுப்பினர் |
| திரு. ஜே.எம். ஜயதிலக ஜயசுந்தர | உறுப்பினர் |
| திரு. வருண அலவ்வ | உறுப்பினர் |
| திரு. அநுர பர்னாந்து | உறுப்பினர் |
| திரு. அனில் குமார சேனாதீர | உறுப்பினர் |
| திரு. எச்.எம்.எல். ஹேமந்த பண்டார ஹேரத் | உறுப்பினர் |
| திரு. பஸில் வன்லங்கன்பேர்க் | உறுப்பினர் |
| திரு. டப்ளியூ.ஏ.சி. ஹேமகுமார | உறுப்பினர் |
| திரு. ஆர்.பீ(B). தென்னகோன் | உறுப்பினர் |
| மேஜர் வை.எச்.பி.என்.வை. சேனாதிபதி | உறுப்பினர் |
| திரு. எம்.பீ(B).எம். இப்ராஹிம் | உறுப்பினர் |
| திரு. மாதவ சன்ஜீவ வத்தேகம | உறுப்பினர் |
| டாக்டர் ஜயந்த பலவர்தன | உறுப்பினர் |
| திரு. எம்.எச்.எல். ஷெரிப் | உறுப்பினர் |
| திரு. பின்சித் அமில பெரேரா | உறுப்பினர் |
| Ms. எம்.என்.பி. குணரத்ன | 2012.1017ஆம் திகதியிலிருந்து அமைச்சின் பிரதிநிதி |
| திரு. கே.டீ.டீ.கே. த ஆப்று | உறுப்பினர் |

1.3 அதிகாரசபை பணியாட்டொகுதி

2012 ஆம் ஆண்டின் போது திரு. றூமி மர்ஸுக் அவர்கள் தவிசாளராக தொடர்ந்து பணியாற்றினார். திருமதி சந்திரிகா திலகரட்ண (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் பணிப்பாளர்) 2012 மே மாதம் வரை பதில் பணிப்பாளர் நாயகமாக தொடர்ந்து பணியாற்றினார். மேலும் 2012 மே 22 திகதி முதல் திரு. சந்திரரட்ண பல்லேகம (இலங்கை நிருவாக சேவை அலுவலர்- வகுப்பு -1) அவர்கள் வேறு ஒரு நிறுவனத்திலிருந்து விடுவித்தலின் பேரில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். அத்தகவலின் அடிப்படையில், 2012 நவம்பர் மாத்திலிருந்து திரு. பல்லேகம அவர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கடமையேற்க வேண்டியிருந்தது. அவரைத் தொடர்ந்து, 2012 டிசெம்பர் 03ஆம் திகதியிலிருந்து திரு. ஜே.எம்.ஏ. டக்லஸ் (இலங்கை நிருவாக சேவை அலுவர்- வகுப்பு-1) அவர்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக கடமையேற்றார்.

அதிகாரசபையின் பிரிவுத் தலைவர்கள் – 2012

| # | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி டீப்தி திஸ்ஸேர<br>M.PA [PIM-ஸ்ரீ ஜயவர்தனபுர] – சட்டத்தரணி | பணிப்பாளர்<br>இணக்கம் மற்றும் அமுலாக்கம் |
| 02 | திருமதி சந்திரிகா திலகரட்ண<br>B.Sc விவசாயம் (விசேடம்) M.Sc (முகாமைத்துவம்) | பணிப்பாளர்<br>பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் |
| 03 | திருமதி. சாந்தினி திருநீலகண்டன்<br>[ACEA] | பணிப்பாளர்<br>போட்டி ஊக்குவிப்பு |
| 04 | திரு. டப்ளியூ.எம். பிரியந்த<br>MPM B.Com (விசேடம்) கௌரவ பட்டதாரி, AIPFM,DPFM | பணிப்பாளர்<br>நிதி |
| 05 | திரு. சம்பத் அங்குலுககா<br>B. Com (விசேடம்) கௌரவ பட்டதாரி, AIPM(இலங்கை). Dip in PM | பணிப்பாளர்<br>மனிதவளங்கள் மற்றும் நிருவாகம் |
| 06 | திரு. ரொகான் மீவனகே- குறித்த காலத்தின்போது விலையிடல் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரின் கடமைகளைத் தொடர்ந்து கவனித்து வருகிறார். | |

## 1.4 பாவனையாளர் அலுவல்கள் சபை

சட்டத்தின் (iv)ஆம் பிரிவின் பிரகாரம், பாவனையாளர் அலுவல்கள் சபை தாபிக்கப்பட்டது. கௌரவ அமைச்சர் பந்துல குணவர்தன அவர்கள் திரு. உபாலி சேனாரத்ன (சட்டத்தரணி) அவர்களை 2009.02.11ஆம் திகதி முதல் தவிசாளராகச் செயற்படும் வண்ணம் நியமித்தார். அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், கௌரவ அமைச்சர் ஜொன்ஸ்ரன் பர்ணாந்து அவர்கள் திரு. சேனாரத்ன அவர்களை 2010.05.20 ஆம் திகதி முதல் தவிசாளராக மீண்டும் ஒரு தடவை செயற்படும் வண்ணம் நியமித்தார். எனவே, அவர் 2012ஆம் ஆண்டின் போது பாவனையாளர் அலுவல்கள் சபையின் தவிசாளராகத் தொடர்ந்து சேவையாற்றினார்.

பாவனையாளர் அலுவல்கள் சபை உறுப்பினர்கள்:

| | | |
|---|---|---|
| திரு. உபாலி சேனாரத்ன (AAL) | - | தவிசாளர் |
| திரு. வசம்ஜ குணவர்தன | - | உறுப்பினர் |
| திரு. சுதத் விஜேவிக்ரம | - | உறுப்பினர் |

பேரவை செயலாளர்

Ms லேகா ஆர்யரத்ன (சட்டத்தரணி)

## 2. அதிகாரசபையின் குறிக்கோள்கள்

அ. பாவனையாளர்களின் உயிருக்கும் ஆதனத்துக்கும் தீங்கு விளைவிப்பதான பண்டங்களைச் சந்தைப்படுத்துவதற்கெதிராக அல்லது சேவைகளை வழங்குவதற்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்

ஆ. நியாயமற்ற வியாபாரப் பழக்கங்களுக்கெதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாத்தலும் பாவனையாளர் நலனுக்குப் போதியளவு கவனஞ் செலுத்தப்படுமென்பதற்கும் உத்தரவாதமளித்தலும்

இ. இயலுமானவிடத்தெல்லாம் பாவனையாளர்கள் நியாயமான விலைகளில் பண்டங்களையும் சேவைகளையும் போதியளவு பெற்றுக் கொள்ளுவதனை உறுதிப்படுத்துதல், அத்துடன்

ஈ. நியாயமற்ற வியாபாரப் பழக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரப் பழக்கங்கள் அல்லது வேறு வகைப்பட்ட வழிகளில் வியாபாரிகளால் பாவனையாளர் சுரண்டப்படுதல் என்பவற்றுக்கெதிராக நிவாரணம் தேடுதல்.

## 3. அதிகாரசபையின் பணிகள்

1) அ. தொழிற்பொறுப்பு முயற்சிகளிடையே மட்டுப்படுத்தும் வியாபார உடன்படிக்கைகளை;

ஆ. விலைகள் தொடர்பில் தொழிற்பொறுப்பு முயற்சிகளிடையே உடன்பாட்டொழுங்குகளை;

இ. சந்தைக்குள்ளாக அல்லது சந்தையின் கணிசமான பகுதியில் உள்நாட்டு வியாபாரம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஆதிக்க நிலையைத் துஷ்பிரயோகம் செய்தலை, அல்லது;

ஈ. உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்தை அல்லது பொருளாதார அபிவிருத்தியைப் பங்கமாகப் பாதிக்கின்ற போட்டி மீதான ஏதேனும் மட்டுப்பாட்டை

கட்டுப்படுத்தல் அல்லது இல்லாதொழித்தல் ;

2) போட்டி எதிர்ப்பு நடைமுறைகள் மற்றும் ஆதிக்க நிலையைத் துஷ்பிரயோகம் செய்தல் என்பன பற்றிப் புலனாய்வு செய்தல் அல்லது விசாரணை செய்தல்

3) பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் ஆட்களிடையே வினைத்திறமையான போட்டியைப் பேணுதலும் மேம்படுத்தலும்

4) பண்டங்களினதும் சேவைகளினதும் விலை. அவை கிடைக்கக்கூடிய தன்மை, அவற்றின் தரம் அத்துடன் அவை வழங்கப்படும் வகைகள் என்பன தொடர்பில் அத்தகைய பண்டங்களினதும் சேவைகளினதும் பாவனையாளர்களினதும் கொள்வனவு செய்வோரினதும் அத்துடன் வேறு பயன்படுத்துநர்களினதும் நலன்களை மேம்படுத்தலும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும்

5) கொள்வனவுக்குக் கிடைக்கச் செய்யப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் தரம், அளவு, ஆற்றல், தூய்மை, தராதரங்கள் மற்றும் விலை என்பன பற்றிப் பாவனையாளர்களுக்கு அறிவித்தல்

6) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் புலனாய்வுகளையும் விசாரணைகளையும் கொண்டு நடாத்துதல்

7) நடப்பில் உள்ளதை விடப் போட்டியானது குறைவாக இருக்குமிடத்து, சந்தைகளின் போட்டி விலைகளை மேம்படுத்துதல்

8) சந்தை நிலைமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பில் கற்கைகளை மேற்கொள்ளல், அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்

9) பகிரங்கத் துறையினதும் தனியார் துறையினதும் வினைத்திறமைக் கற்கைகளை மேற்கொள்ளுதல்

10) பாவனையாளர்களின் உடல் நலம், காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாவனையாளர் கல்வியை ஊக்குவித்தல்

11) சந்தை நிலைமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பில் வேறு நிறுவனங்களுடன் தகவல் பரிமாற்றத்தை முன்னேற்றுதல்

12) பாவனையாளர் ஒழுங்கமைப்புகளைத் தாபிப்பதனை மேம்படுத்துதல், உதவுதல் மற்றும் ஊக்கமளித்தல்

13) அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகள் தொடர்பில் அத்தகைய கட்டணங்களை விதித்தல்

14) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான ஏதேனும் அத்தகைய குழுக்களை நியமித்தல், அத்துடன்

15) அதிகாரசபையின் பணிகளை வினைத்திறமையாக நிறைவேற்றுவதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

## 4. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை செயலாற்றுகை

தாபனக் கட்டமைப்பின் பிரகாரம், அதிகாரசபையானது 06 பணிப்பாளர்களின் கீழ் இயங்கும் 06 பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன:

1) பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்
2) இணக்கம் மற்றும் அமுலாக்கல்
3) விலையிடல் மற்றும் முகாமைத்துவம்
4) போட்டியை ஊக்குவித்தல்
5) நிதி
6) மனிதவளம் மற்றும் நிருவாகம்

2012 ஆம் ஆண்டின் போதான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது.

**1. தீங்கு விளைவிக்கும் மற்றும் குறைந்த தரம் கொண்ட பண்டங்கள் மற்றும் சேவைளிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல்.**

அ. சட்டத்தின் 10ஆம் மற்றும் 12ஆம் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

i. பணிப்புரை இலக்கம் 39 – உள்ளூர் உற்பத்தி செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழங்களைப் பொதி செய்வதற்கென பிளாஸ்டிக், வன்கடதாசி அல்லது மரப்பெட்டிகளின் பாவனை

இது அறுவடைக்குப் பின்னரான சேதத்தைக் குறைப்பதற்கென 21 மரக்கறிகள் மற்றும் பழங்கள் தொடர்பாக வழங்கப்பட்டது. அவையாவன – தக்காளி, சுண்டங்காய், கரட், பாகற்காய், குருவித்தலைப் பாகற்காய், கோலிபிளவர், பெல்பெப்பர், லெட்டூஸ், முள்ளங்கி, கறிமிளகாய், பூசணி, பப்பாளி, கொய்யா, அவகாடோ, தோடை, மாதுளை, திராட்சை, பெயர்ஸ், மங்குஸ்தான், ஸ்ரோபெரி, கொடித்தோடை ஆகும்.

ii. பணிப்புரை இலக்கம் 40 – வீட்டுப் பாவனைக்குரிய திரவ பெற்றோலிய வாயுவை நிரப்பும் உருக்கு உருளைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய துணைப்பொருட்கள் பற்றிய இலங்கை கட்டளைகள் பணியக தராதரம்.

இப்பணிப்புரை உள்ளூர் திரவ பெற்றோலிய வாயுவை நிரப்பும் உருளைகள் மற்றும் துணைப் பொருட்களின் தராதரங்களைப் பேணுவதற்கென அறிமுகப்படுத்தப்பட்டது.

iii. பணிப்புரை இலக்கம் 41 – பெட்டிகளில் உள்ள காப்புச் செய்யப்பட்ட தீக்குச்சிகள் தொடர்பான இலங்கை கட்டளைகள் பணியக தராதரம்.

காப்புச் செய்யப்பட்ட தீக்குச்சிகளின் தரம் மற்றும் காப்பீடு ஆகியவற்றைப் பேணுவதற்கு பெட்டிகளில் உள்ள காப்புச் செய்யப்பட்ட தீக்குச்சிகளுக்கென கட்டாயமாக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவக அடையாளம் / குறியீடு

iv. பணிப்புரை இலக்கம் 42 – சகல மருந்துப் பொருட்கள் மற்றும் விற்றமின்கள் ஆகியவற்றின் பொதிகள், பெட்டிகள் அல்லது பகுதிகளுக்கு சுட்டுத்துண்டு ஒட்டுதல்.

மருந்துப் பொருட்கள் மற்றும் விற்றமின்கள் ஆகியவற்றில் பல்வேறு விபரங்களைக் குறித்துக் காட்டுவது கட்டாயமாக்கப்பட்டதன் மூலமாக பாவனையாளர்கள் அத்தகைய விபரங்களை கொள்வனவிற்கு முன் அறிந்து கொள்வர்.

v. பணிப்புரை இலக்கம் 43 – ஏதேனும் மருந்துப் பொருள் அல்லது விற்றமின் ஆகியவற்றின் தற்போதைய சில்லறை விற்பனை விலையின் ஏதேனும் திருத்தமானது, அத்தகைய திருத்தமொன்றை மேற்கொள்ள முன்னரே பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இது மருந்துப் பொருட்கள் மற்றும் விற்றமின்கள் தொடர்பாக சீரானதொரு விலைக் கட்டமைப்பைப் பேணுவதற்கு வழங்கப்பட்டது.

## ஆ. குறைந்த தரமுடைய இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களைக் கண்காணித்தல்

குறைந்த தரமுடைய பொருட்கள் நாட்டில் உள்ள நுழைவு இடங்களை வந்தடைவதைத் தவிர்க்கும் பொருட்டு இலங்கை கட்டளைகள் பணியக நிறுவனம் மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறக்குமதி பரிசீலனைத் திட்டத்தின் கீழ் தராதரங்களுடன் இணங்கியொழுகாமை தொடர்பில் இலங்கை கட்டளைகள் பணியகத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பண்டங்கள் மீள் ஏற்றுமதி செய்யப்படவேண்டிய 146 விடயங்களை அதிகாரசபை கண்காணித்தது.

இ. தேசிய குழுக்களில் பிரதிநிதித்துவம் செய்ததுடன் பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கென கொள்கைகள் / சட்டங்கள் தொடர்பில் பங்களிப்புச் செய்துள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, சுகாதார அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, மின்வலு, எரிசக்தி அமைச்சு, பொருளாதார அபிவிருத்திக்கான தேசியப் பேரவை ஆகியவற்றின் கீழ் இயங்கும் தேசிய மட்ட குழுக்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன் பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கான கொள்கை மற்றும் சட்டம் தொடர்பாகவும் பங்களிப்புச் செய்கிறது.

## 2. ஏமாற்று நடத்தை மற்றும் நியாயமற்ற வர்த்தக பழக்கங்களுக்கு எதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்

அ. வியாபார சமூகத்திற்கான விழிப்புணர்வு (அறிவூட்டல்)

சிவில் சமூகங்களின் வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களினுடனான விழிப்பூட்டலின் மூலமாக பாதிப்புறும் குழுக்களைப் பாதுகாத்தல், தரமுயர்த்தல், வலுவூட்டுதல் ஆகியவை போட்டியை ஊக்குவிக்கும் மிக பயனுறுதிமிக்க வழியாகும். இது திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்ட வர்த்தக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2012 ஆம் ஆண்டின் போது அதிகாரசபை, வியாபார சமூகத்திற்கென 183 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது.

**அட்டவணை – 1** – 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட வர்த்தக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

| மாவட்டம் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 22 | 1,807 |
| புத்தளம் | 01 | 11 |
| மாத்தறை | 110 | 1,466 |
| நுவரெலியா | 06 | 201 |
| வவுனியா | 01 | 28 |
| யாழ்ப்பாணம் | 03 | 108 |
| இரத்தினபுரி | 01 | 25 |
| மாத்தளை | 05 | 89 |
| மட்டக்களப்பு | 02 | 80 |
| கண்டி | 13 | 577 |
| ஹம்பாந்தோட்டை | 01 | 13 |
| அநுராதபுரம் | 01 | 56 |
| திருகோணமலை | 06 | 337 |
| பொலன்னறுவை | 01 | 21 |
| பதுளை | 03 | 77 |
| குருநாகல் | 01 | 34 |
| கேகாலை | 02 | 39 |
| அம்பாறை | 02 | 47 |
| காலி | 01 | 65 |
| கம்பஹா | 01 | 40 |
| **மொத்தம்** | **183** | **5,121** |

ஆ. சந்தை கண்காணிப்பு

சமூகத்தின் வாழ்க்கையில் ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் அவசியமானது என கௌரவ அமைச்சர் கருதும் பட்சத்தில் அல்லது அதனகத்து, அமைச்சர் அதிகாரசபையுடனான ஆலோசனையுடன் அவரது கட்டளைப்படி, அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகளை குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகளாக அரசாங்க வர்ததமானப் பத்திரிகையில் வெளியிடுமாறு சிபார்சு செய்யப்படும்.

பின்வருவன குறித்துரைக்கப்பட்ட பண்டங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளது:

i. சீமெந்து
ii. திரவ பெற்றோலிய வாயு
iii. பால்மா
iv. அரிசி
v. கோழி இறைச்சி
vi. கோதுமை மா
vii. வெள்ளைச் சீனி
viii. செத்தல் மிளகாய்
ix. பெரிய வெங்காயம்
x. சின்ன வெங்காயம்
xi. பருப்பு
xii. நெத்தலிக் கருவாடு
xiii. கொண்டல் கடலை
xiv. பாசிப் பயறு
xv. தகரத்திலடைத்த மீன்

சீமெந்து, திரவ பெற்றோலிய வாயு, பால்மா, கோழி இறைச்சி மற்றும் அரிசி ஆகியவற்றின் விலையை கண்காணிப்புச் செய்யும் நோக்கத்துடன் கொழும்பு மற்றும் நகரப்புறங்களில் ஒழுங்கான அடிப்படையில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இ. சந்தை தொடர்பான திடீர் சோதனைகளும் புலனாய்வுகளும்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுட்டத் துண்டுகள் பற்றிய அறிவுறுத்தல்களை மீறுதல், அடையாளமிடப்பட்ட விலைக்கு மேலாக விற்றல், பண்டங்களை விற்பதற்கு இணங்காமை, பண்டங்களை வைத்திருப்பதற்கு இணங்காமை, பண்டங்களைப் பதுக்கி வைத்தல், அதிகாரசபையின் எழுத்து மூலமான முன்னறிவித்தலின்றி சில பொருட்களின் சில்லறை அல்லது மொத்த விலையை அதிகரித்தல், விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாது விடல், கொள்வனவு செய்பவர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்காமை, உற்பத்தியாளர்கள் / வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்படும் தவறான அல்லது ஏமாற்று நடவடிக்கை மற்றும் தவறான பிரதிநிதித்துவங்கள் ஆகியவற்றுக்கென திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தவறான வர்த்தகர்கள் மீது சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுவதுடன் சட்டத்தின் 60ஆம் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் குற்றப்பணம் விதிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின்போது, அதிகாரசபை 27,746 சந்தை தொடர்பான திடீர் சோதனைகளை மேற்கொண்டிருந்தது. இத்திடீர் சோதனைகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைமை அலுவலக அதிகாரிகளினாலும் மாவட்ட பிரிவுடன் இணைந்துள்ள அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக தவறிழைத்த வர்த்தகர்கள் மீது நீதிமன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணத்தின் தொகை ரூபா. 92.1 மில்லியனாகும்.

சந்தை தொடர்பான திடீர் சோதனைகளின் முன்னேற்றம் மற்றும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஆகியவை அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 –** சந்தை தொடர்பான திடீர் சோதனைகளின் முன்னேற்றம் மற்றும் விதிக்கப்பட்ட குற்றப்பணம்

| மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (இலக்கு) | திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட குற்றப்பணம் ரூபாவில் |
|---|---|---|---|
| சந்தை தொடர்பான திடீர் சோதனைகளும் புலனாய்வுகளும்<br>அ.10ஆம் பிரிவில் சந்தை தொடர்பான திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகள் (*10 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீறுதல்*) | 4,758 | 4,269 | 15,330,250 |
| ஆ.11ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*அடையாளமிடப்பட்ட விலையிலும் பார்க்க கூடிய விலையில் விற்றல்*) | 3,659 | 3,713 | 13,327,600 |
| இ.12ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*தராதரங்களுடன் இணங்கியொழுகாமை*) | 170 | 145 | 687,500 |
| ஈ.15ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் | 7 | 5 | 14,500 |
| உ.16ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*ஏதேனும் பண்டங்களை வைத்திருப்பதற்கு இணங்காமை*) | 10 | 7 | 30,000 |
| ஊ.17ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*பண்டங்களை பதுக்கி வைத்தல்*) | | | |
| எ.18ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*அதிகூடிய சில்லறை விலையை மீறுதல்*) | 16 | 35 | 156,000 |
| மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (இலக்கு) | திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட குற்றப்பணம் ரூபாவில் |

| மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (இலக்கு) | திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட குற்றப்பணம் ரூபாவில் |
|---|---|---|---|
| ஏ.20ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் | 1,204 | 950 | 2,931,550 |
| ஐ.26ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை*) | 9,476 | 9,791 | 29,637,500 |
| ஓ.28ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*வர்த்தகர்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு பற்றுச்சீட்டை வழங்குதல்*) | 56 | 89 | 380,400 |
| ஓ.30ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*தவறாக வழிநடத்தும் அல்லது ஏமாற்றும் நடத்தை*) | 4,837 | 4,000 | 16,802,150 |
| ஔ.30ஆம், 31ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*தவறாக வழிநடத்தும் பொய்யான பிரதிநிதித்துவம்*) | 2,543 | 2,277 | 8,456,00 |
| க.31ஆம் பிரிவில் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*பொய்யான பிரதிநிதித்துவம்*) | 1,010 | 945 | 4,346,200 |
| **மொத்தம்** | **27,746** | **26,226** | **92,099,650** |

திடீர் சோதனைகள் தவிர தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை 65 ஆக இருந்ததுடன் அதிகாரசபை குற்றப்பணமாக ரூபா. 746,000/- வை சேகரித்திருந்தது.

ஈ. இறக்குமதி வேளையின் போதான அதிகூடிய சில்லறை விலையுடன் விலையை குறிப்பிடுவதற்கு இனங்காணப்பட்ட இறக்குமதி செய்த பண்டங்களின் மீதான அதிகூடிய சில்லறை விலையை நடைமுறைப்படுத்தல், உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலமாக உள்ளூர் உற்பத்திகளைப் பாதுகாத்தல், இனங்காணப்பட்ட சில உற்பத்திப் பொருட்கள் ஆகியவை பரிசீலிக்கப்படுவதுடன் அவை அதிகாரசபையினால் கண்காணிக்கப்படுகிறது.

நாட்டினுள் பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுமுன், விலை குறிப்பிடுதல் தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 11.07.2007 ஆம் திகதிய 1505/15 இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலினால் பிரகாரம் இனங்காணப்பட்ட ஐந்து உற்பத்திப் பொருட்களின் சகல இறக்குமதியாளர்களும் வேண்டப்படுகின்றனர். அதற்கிணங்க, இறக்குமதியாளர்களினால் பண்டங்கள் பற்றிய தடைநீக்கம் பெறப்படுவதற்கு முன்னரே உத்தேசிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையுடனான விண்ணப்பப்படிவத்தை அதிகாரசபைக்குச் சமர்ப்பிப்பதற்கென கட்டளையொன்றை சுங்கத் திணைக்களம் வழங்கியுள்ளது.

அதைத் தொடர்ந்து வெளிப்படுத்திய அதிகூடிய சில்லறை விலையை உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியாளர்கள், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கின்றனர். அதிகூடிய சில்லறை விலையின் அடிப்படையில் இலங்கைச் சுங்கத்தினால் செஸ் வரி விதிக்கப்படுகிறது. இலங்கைச் சுங்கத்திற்கு வெளிப்படுத்திய விலைகள் சந்தையில் இணங்கியொழுகப்படுகின்றதா என்பதை உறுதி செய்வதற்கு இவ்விலைகளின் மீதான சந்தைப் பரிசீலனையை அதிகாரசபை ஒழுங்காக மேற்கொண்டுவருகிறது.

i. இனிப்பு பண்டங்கள்
ii. சொக்கலேட்டுகள்
iii. பிஸ்கட்டுகள்
iv. கேக் வகைகள்
v. மலசலகூட சவர்க்காரம்

317 விண்ணப்பங்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப் பெற்றவுடன் அவை யாவும் தீர்வு காணப்பட்டன.

3. நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளினால் பாதிப்புறும் பாவனையாளர்களுக்கு நிவாரணமளித்தல்

அ. பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுதல்

சட்டத்தின் 13ஆம் மற்றும் 32ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பாவனையாளர் முறைப்பாடுகளில் தலையீடு செய்கிறது. உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர்களினால் வழங்கப்பட்ட உறுதிமொழி அல்லது உத்தரவாதத்திற்கு அமைவாக நடைபெறாத பண்டங்களின் விற்பனை அல்லது சேவை வழங்கல் தொடர்பிலான முறைப்பாடுகளை அதிகாரசபை விசாரணை செய்ய முடியும்.

2012 ஆம் ஆண்டின்போது, 1603 முறைப்பாடுகள் அதிகாரசபைக்குக் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் இரு தரப்பினர்களினதும் திருப்தியுடன் 614 முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன. மாவட்ட பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பாவனையாளர்களின் முறைப்பாடுகள் 23 ஆகும். 625 முறைப்பாடுகள் சந்தை தொடர்பான திடீர் சோதனைகளுக்கென ஆற்றுப்படுத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டின்போது பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணை 3 மற்றும் 4 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை – 3**

2012 ஆம் ஆண்டின்போது கையாளப்பட்ட பாவனையாளர் முறைப்பாடுகள்

| | |
|---|---|
| கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1,603 |
| ஏனைய நிறுவனங்களுக்கு * ஆற்றுப்படுத்தப்பட்டவை | 144 |
| திடீர் சோதனைகள் மற்றும் ஏனைய* நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை | 755 |
| முடிவுறுத்தப்பட்டவை* | 614 |
| நிராகரிக்கப்பட்டவை* | 51 |
| கலந்தாராய்வுகள் மேற்கொள்ளப்பட்டவை* | 463 |

* கடந்த ஆண்டு முடிவுறுத்தப்பாடத முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை சேர்கப்படடுள்ளது.

**அட்டவணை – 4 –** பாவனையாளர் முறைப்பாடு தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணைகள்:

| மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை | எண்ணிக்கை |
|---|---|
| விசாரணை நடைபெற்றது | 149 |
| விசாரணைகள் தீர்த்துவைக்கப்பட்டது | 22 |
| கட்டளைகள் வழங்கப்பட்டது | 12 |
| கலந்தராய்வுகள் மேற்கொள்ளப்பட்டது (விசாரணையின் முன்) | 55 |

பிரதிவாதிகள் இணங்கியொழுகாமையினால் கட்டளைகளை அமுல்படுத்துவதற்கென அதிகாரசபை நீதுவான் நீதிமன்றில் 7 வழக்குகளைத் தொடுத்துள்ளது.

4. பாவனையாளர் கல்வி மற்றும் வலுவூட்டல்

அ. பாவனையாளர் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகம், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள், கண்காட்சிகள் ஆகிய ஏனையவற்றை உபயோகித்து பாவனையாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள், தற்போதைய பாவனையாளர் சட்டம், சிறந்த பாவனையாளர் விழுமியங்கள், சிறந்த வியாபார நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களைப் பற்றி பொதுமக்களுக்கு கல்வி அறிவூட்டுகிறது. மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக பாவனையாளர் குழுமங்கள் மற்றும் வியாபார சமூகங்கள், ஆகியவற்றின் பங்களிப்புடன் பாவனையாளர் உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. பாவனையார் உரிமைகள், சட்டத்தின் விதிகள், மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியன பற்றி நாடு பூராகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2012 ஆம் ஆண்டின்போது, அதிகாரசபையானது பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசாங்க அதிகாரிகள், சனசமூக அமைப்புகள், இல்லத்தரசிகள் மற்றும் பொதுமக்கள் ஆகிய பாவனையாளர் குழுமங்களுக்கென 149 பாவனையாளர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பாவனையாளர் அிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, பொதுமக்களுக்கு கல்வி அறிவூட்டுவதற்கென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கண்காட்சி மற்றும் வர்த்தக சந்தைகள் தொடர்பாகவும் பங்களிப்புச் செய்துள்ளது. பொதுமக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம், பாவனையாளர் அமைப்புகளைத் தாபித்தல், பாடசாலைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை பாவனையாளர் கழகங்களைத் தாபித்தல், கண்காட்சிகள் ஆகியவை அட்டவணை 5-9 வரை காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை – 5 –** பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாவட்டம் | மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 27 | 33,081 |
| காலி | 02 | 5,070 |
| புத்தளம் | 01 | 4,250 |
| பதுளை | 01 | 5,000 |
| அநுராதபுரம் | 03 | 5,675 |
| மாத்தறை | 09 | 2,171 |
| யாழ்ப்பாணம் | 07 | 1,202 |
| பொலன்னறுவை | 04 | 3,303 |
| கம்பஹா | 01 | 4,500 |
| குருநாகல் | 04 | 5,195 |
| இரத்தினபுரி | 03 | 3,290 |
| கேகாலை | 01 | 4,200 |
| மொனராகலை | 01 | 3,500 |
| அம்பாறை | 03 | 1,490 |
| ஹம்பாந்தோட்டை | 01 | 2,950 |
| களுத்துறை | 02 | 4,242 |
| வவுனியா | 01 | 4,100 |
| மாத்தளை | 02 | 4,910 |
| நுவரெலியா | 01 | 5,000 |
| மட்டக்களப்பு | 02 | 895 |
| கண்டி | 09 | 5,222 |
| திருகோணமலை | 08 | 4,251 |
| **மொத்தம்** | **93** | **113,497** |

**அட்டவணை – 6**

பாவனையாளர் அமைப்புகளைத் தாபித்தல்

| மாவட்டம் | தாபிக்கப்பட்ட அமைப்புக்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட தாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 06 | 02 |
| மாத்தறை | 01 | 01 |
| பொலன்னறுவை | - | 01 |
| யாழ்ப்பாணம் | 01 | - |
| வவுனியா | 34 | 34 |
| கேகாலை | 01 | 01 |
| மட்டக்களப்பு | 07 | 01 |
| இரத்தினபுரி | 03 | - |
| கம்பஹா | 01 | - |
| திருகோணமலை | 06 | 07 |
| **மொத்தம்** | **60** | **47** |

**அட்டவணை – 7**

பாடசாலைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாவட்டம் | மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 18 | 3,368 |
| திருகோணமலை | 28 | 1,446 |
| நுவரெலியா | 01 | 50 |
| மாத்தறை | 02 | 361 |
| குருநாகல் | 02 | 141 |
| மட்டக்களப்பு | 03 | 112 |
| காலி | 01 | 300 |
| அம்பாறை | 01 | 23 |
| **மொத்தம்** | **56** | **5,801** |

**அட்டவணை – 8**

பாடசாலை பாவனையாளர் கழகங்களைத் தாபித்தல்

| மாவட்டம் | தாபிக்கப்பட்ட பாவனையாளர் கழகங்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட பாவனையாளர் கழகங்களின் எண்ணிக்கை |
|---|---:|---:|
| கொழும்பு | 13 | 10 |
| திருகோணமலை | 27 | 21 |
| **மொத்தம்** | **40** | **31** |

**அட்டவணை – 9**

கண்காட்சிகள்

| செயற்பாட்டின் வகை | திகதி | பார்வையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---:|
| தேசத்திற்கு மகுடம் 2012 – அநுராதபுரம் | 04.02.2012 – 12.02.2012 | 600,000 |
| மஹபொல கண்காட்சி - 2012 புனித அந்தோனியார் ஆண்கள் பாடசாலை, கட்டுகாஸ்தோட்ட | 06.04.2012 – 12.04.2012 | 1,800 |
| சட்ட வாரம் 2012 – கண்காட்சி | 01.12.2012 | 500 |
| **மொத்தம்** | | **602,300** |

## 5. எதிர்மறையான போட்டித்தன்மைமிக்க வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல் மற்றும் ஆரோக்கியமான போட்டிகளை ஊக்குவித்தல்

அ. போட்டியை ஊக்குவித்தல்

2012 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் குற்றஞ்சாட்டப்பட்ட போட்டிக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் 36 புலனாய்வுகளை அதிகாரசபை மேற்கொண்டிருந்தது. மேலும், இம்முறைப்பாடுகளில் 24 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு அக்காலப்பகுதியில் தீர்த்துவைக்கப்பட்டிருந்த வேளையில் 03 முறைப்பாடுகள் பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை தவிர, சமையல் எண்ணெய்க்கான சந்தையில் ஏதேனும் சாத்தியப்படக்கூடிய போட்டிக்கு எதிரான நடைமுறைகளை இனங்காணுவதற்கென அதிகாரசபை தனது பூர்வாங்க (ஆரம்ப கட்ட) ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

போட்டி நிலைமை, போட்டியை ஊக்குவிக்கும் சாத்தியக்கூறு, பல்வேறு கைத்தொழில்களில் உள்ளூர் கைத்தொழில்களின் பாதுகாப்பு ஆகியவற்றை இனங் காண்பதற்கென விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இது ஊதுபத்தி, போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர், மோட்டார் வாகனங்களின் உதிரிப் பாகங்கள், முழு ஆடைப் பால்மா ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

பங்குச் சந்தையை இனங்காணல் மற்றும் புள்ளிவிபரத் தரவுகளைச் சேகரித்தல்

சந்தையில் அல்லது சந்தையின் பெரும்பகுதியில் நடைபெறும் வர்த்தகம் தொடர்பாக ஆதிக்கம் செலுத்தும் நிலையின் துர்ப்பாக்கியத்தை நீக்குதல் அல்லது கட்டுப்படுத்துதல் தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பொறுப்புடையதாகும். உள்ளூர் சந்தையில் கிடைக்கப்பெறும் தெரிவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஆதிக்கம் செலுத்தும் நிலைமையின் ஏதேனும் சாத்தியப்படும் துர்ப்பாக்கியம் ஆகியன தொடர்பாக தொழில் முயற்சிகளின் பங்குச்சந்தையை இனங்காண்பதற்கென புள்ளிவிபரவியல் தரவுகள் சேகரிக்கப்படுகின்றது.

சந்தை ஆதிக்கத்துக்கான சாத்தியக்கூற்றை ஆராயும் நோக்கில் 27 உற்பத்திப் பொருட்களின் பங்குச் சந்தையைக் கணிப்பீடு செய்தல் பற்றி அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. போட்டித்தன்மையற்ற பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக சந்தையை இனங்காணுதல் மிக முக்கியமானதாகும்.

அத்தியாவசியப் பண்டங்கள் மீதான 25 விலைப் பேணுகையை அதிகாரசபை மேற்கொண்டுள்ளது.

உணவுப் பண்டங்கள், மரக்கறிகள் மற்றும் மீன் ஆகியவற்றின் நாளாந்த சந்தை விலையின் அடிப்படையில், விலைப் பகுப்பாய்வு அறிக்கைகள் நாளாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

போட்டியை ஊக்குவிப்பதற்கென வலுவூட்டல் வர்த்தக நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்காலப்பகுதியில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ. உள்ளூர் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்

இனிப்புப் பண்டங்கள், சொக்கலேட்டுகள், பிஸ்கட்டுகள், கேக் மற்றும் மலசலகூட சவர்க்காரம் ஆகியவற்றின் இறக்குமதியாளர்கள் தமது அதிஉச்ச சில்லறை விலை பற்றிய வெளிப்படுத்துகைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கின்றனர். வெளிப்படுத்தப்பட்ட அதிஉச்ச சில்லறை விலையை அடிப்படையாகக் கொண்டு செஸ் வரியானது சுங்கத் திணைக்களத்தினால் விதிக்கப்படுகிறது. வெளிப்படுத்தப்பட்ட விலைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமையை உறுதி செய்வதற்கென இந்த உற்பத்திப் பொருட்களின் மீது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வெளிப்படுத்துகையின் பேரில், சந்தை தொடர்பான பரிசீலனை ஒழுங்காக மேற்கொள்ளப்படுகிறது. இக்காலத்தின்போது 317 விண்ணப்பங்கள் கையாளப்பட்டன.

6. நியாயமான விலையிடலை உறுதிசெய்தல்

அ. குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் விலை ஒழுங்காக்கல்

சட்டத்தின் 18,19 மற்றும் 20 ஆம் பிரிவுகளில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட பண்டங்களின் சந்தை விலை தொடர்பாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தலையீடு செய்கிறது. தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் விலைகளை உறுதி செய்வதற்கு / நிலையாக வைத்திருப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழேயுள்ள அட்டவணை 10 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை – 10** – தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் விலைகளை உறுதி செய்வதற்கு / நிலையாக வைத்திருப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| வியாபாரப் பண்டம் | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| சீமெந்து | சீமெந்து கம்பனிகளால் விடுக்கப்படட கோரிக்கையைப் பரிசீலித்து, 2012 மே 03ஆம் திகதியிலிருந்து சாதாரண போட்லண்ட் சீமெந்து மற்றும் போட்லண்ட் சுண்ணக்கல் சீமெந்து ஆகியவற்றின் நடைமுறையிலிருந்த அதிஉச்ச சில்லறை விலையை ரூபா. 785/- இருந்து ரூபா. 855/- மற்றும் மேசன் சீமெந்தின் அதிஉச்ச சில்லறையை விலையை ரூபா. 735/- இருந்து ரூபா. 805/- வரையும் அதிகரிப்பதற்கான வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. |
| பால்மா | பால்மா கம்பனிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்து, முழு ஆடைப் பால்மாவின் அதிகூடிய சில்லறை விலை மீளாய்வு செய்யப்பட்டு, சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலொன்று 2012 மே 04 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது:<br><br>400 கிராம் முழு ஆடைப் பால்மா பக்கட் – ரூபா 325/-<br><br>1 கிலோகிராம் முழு ஆடைப் பால்மா பக்கட் – ரூபா 810/- |


திரவப் பெற்றோலிய வாயு

இரண்டு பிரதான திரவப் பெற்றோலிய வாயு கம்பனிகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலைகள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன், 2007ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட விலையிடல் சூத்திரத்தின் அடிப்படையில் விலைகள் கணிக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் 12.5 கிலோகிராம் எடையுடைய திரவ பெற்றோலிய வாயு சிலிண்டரின் விலை ஒழுங்காக்கல் அட்டவணை 11 இல் தரப்பட்டுள்ளது.


**அட்டவணை 11** – 2011 ஆம் ஆண்டின் ஒப்பீடு ஒன்றுடன் 2012 ஆம் ஆண்டுக்கான 12.5 கிலோகிராம் எடையுடைய திரவ பெற்றோலிய வாயு சிலிண்டரின் விலையை ஒழுங்காக்கல்

| மாதம் | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | லிற்றோ வாயு | லப் வாயு | லிற்றோ வாயு | லப் வாயு |
| ஜனவரி | 2,046 | 2,046 | 1,652 | 1,556 |
| பெப்ரவரி | 2,046 | 2,046 | 1,652 | 1,556 |
| மார்ச் | 2,046 | 2,046 | 1,652 | 2,029 |
| ஏப்ரல் | 2,046 | 2,046 | 1,890 | 2,029 |
| மே | 2,396 | 2,396 | 1,890 | 1,947 |
| ஜூன் | 2,396 | 2,396 | 1,890 | 1,947 |
| ஜூலை | 2,246 | 2,246 | 1,890 | 2,050 |
| ஆகஸ்ட் | 2,246 | 2,246 | 2,046 | 2,050 |
| செப்ரெம்பர் | 2,246 | 2,246 | 2,046 | 2,050 |
| ஒக்டோபர் | 2,246 | 2,246 | 2,046 | 2,050 |
| நொவெம்பர் | 2,246 | 2,246 | 2,046 | 2,050 |
| டிசெம்பர் | 2,246 | 2,246 | 2,046 | 2,046 |

2011 மற்றும் 2012 ஆகிய வருடங்களின்போது 12.5 கிலோகிராம் எடையுடைய லிற்றோ எரிவாயு சிலிண்டரின் சில்லறைவிலை (கொழும்பு)




2011 மற்றும் 2012 ஆகிய வருடங்களின்போது 12.5 கிலோகிராம் எடையுடைய லப் திரவப் பெற்றோலிய எரிவாயு சிலிண்டரின் சில்லறை விலை (கொழும்பு)



7. தாபனத்தின் இயலளவை மேம்படுத்துதல்

அ. பணியாட்களின் மேம்பாடு

எமது சேவைகளின் தரத்தை உயர்த்துவதில் பங்களிப்புச் செய்யும் முதலீடான பணியாட்களை அவர்களின் சம்பந்தப்பட்ட துறை தொடர்பாக மேம்படுத்துவது தொடர்பாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பரிசீலிக்கிறது. 2012 ஆம் ஆண்டின் நடாத்தப்பட்ட பணியாட்களின் பயிற்சி நிகழச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே உள்ள அட்டவணை 12 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை – 12

2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணியாட்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| இலக்கம் | பாடநெறியின் தலைப்பு | பங்கேற்பு |
|---|---|---|
| 01 | "ஊழியர் திருப்தி/ வேலையில் சந்தோஷம்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 52 |
| 02 | மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் மற்றும் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட சாரதிகளுக்கான ஒரு நாள் செயலமர்வு | 18 |
| 03 | இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ஊழியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 68 |
| 04 | இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (இணையத்தளம்) | 01 |
| 05 | சிஎல்எஸ் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தச் சட்டம் பற்றிய கொழும்பு மாநாடு | 01 |
| 06 | என்ஜஎல்எஸ் நிறவனத்தினால் நடாத்தப்பட்ட களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய பாடநெறி | 01 |
| 07 | எஸ்டிஎப்எல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அரசாங்க கொள்வனவுச் சேவை நடைமுறை பற்றிய செயலமர்வு | 02 |
| 08 | எஸ்டிஎப்எல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக நடைமுறை | 01 |

| இலக்கம் | பாடநெறியின் தலைப்பு | பங்கேற்பு |
|---|---|---|
| 09 | பிஆர்ஏஜி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள் | 03 |
| 10 | இலங்கை சுதந்திரசேவை சங்கத்தினால் நடாத்தப்பட்ட பால்நிலை சோசலிசம் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் | 02 |
| 11 | தேசிய தொழிற்கற்கைகள் நிறவனத்தினால் நடாத்தப்பட்ட உயர்தொழில் வினைத்திறனுக்கான அலுவலக உதவியாளரின் சேவை | 02 |
| 12 | எஸ்டிஎப்எல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கணக்கீட்டு தராதரங்களுடன் இணங்கியொழுகும் நிதி அறிக்கையிடல் பற்றிய இரண்டு நாள் செயலமர்வு | 04 |
| 13 | இலங்கை அபிவிருத்தி நிருவாகத்தால் நடாத்தப்பட்ட சீன அனுபவத்தினடிப்படையிலான 21ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்கு அப்பாற்பட்ட மனிதவள அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் நடைமுறை | 02 |
| 14 | உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 54 |
| 15 | இலஙகை கட்டளைகள் நிறுவக தராதரங்கள் | 72 |
| 16 | உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 88 |
| 17 | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் பங்களிப்பு | 65 |
| 18 | உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பங்களிப்பு | 60 |
| 19 | தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பங்களிப்பு | 86 |
| 20 | இலஞ்ச அல்லது ஊழல் தொடர்பான சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பங்களிப்பு | 84 |
| 21 | பாவனையாளர் அலுவல்கள் சட்டம் தொடர்பான நீதிமன்ற நடைமுறை | 85 |
| | மொத்தம் | 760 |

ஆ. அதிகாரசபையின் பணியாட்கள் பதவிநிலையைப் பலப்படுத்தல்

| சம்பளக் குறியீடு | பதவிநிலை | 2011.05.19 இல் உள்ளவாறு அங்கீகரிக் கப்பட்ட பதவியணி | 2011.12.31 இல் உள்ளவாறு தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| **எச்எம் 2-1** | **சிரேட்ட முகாமையாளர்** | | | |
| **எச்எம் 1-1** | **பணிப்பாளர் நாயகம்** | 1 | 1 | 0 |
| | பணிப்பாளர் | 6 | 5 | 1 |
| | பேரவைச் செயலாளர் | 1 | 1 | 0 |
| **எம்எம் 1-1** | **முகாமையாளர்** | | | |
| | உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 0 | 1 |
| | பிரதிப் பணிப்பாளர் | 15 | 3 | 8 |
| | உதவிப் பணிப்பாளர் | | 4 | |
| | பிரதி/ உதவிப் பணிப்பாளர் - பிராந்தியம் | 9 | 0 | 9 |
| **ஜேஎம் 1-1** | **கனிஷ்ட முகாமையாளர்** | | | |
| | கணக்காய்வு அலுவலர் | 2 | 0 | 2 |
| | முறைமை நிருவாகி | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட விசாரணை அலுவலர் | 27 | 0 | 27 |
| | சிரேஷ்ட புள்ளிவிபர அலுவலர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட சந்தை வளமூல பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| | சிரேஷ்ட கணக்கீட்டு அலுவலர் | 2 | 2 | 0 |
| | அந்தரங்க செயலாளர் (பணிப்பாளர் நாயகம்) | 1 | 0 | 1 |
| | அந்தரங்க செயலாளர் (தவிசாளர்) | 1 | 1 | 0 |
| | சிரேஷ்ட நிருவாக/ மனிதவள அலுவலர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட சட்டஅமுலாக்கல் அலுவலர் | 2 | 2 | 0 |
| | சிரேஷ்ட செலவாக்குதல் அலுவலர் | 1 | 1 | 0 |
| **எம்ஏ 5-2** | **அமுலாக்கல்/ நடவடிக்கை/ விரிவாக்கல்** | | | |
| | தரவு ஒருங்கிணைப்பாளர் | 1 | 0 | 1 |
| | புள்ளிவிபரவியல் அலுவலர் | 1 | 0 | 1 |
| | சந்தை வளமூல பகுப்பாய்வாளர் | 1 | 0 | 1 |
| | ஆவணமாக்கல் அலுவலர் | 6 | 0 | 6 |

| சம்பளக் குறியீடு | பதவிநிலை | 2011.05.19 இல் உள்ளவாறு அங்கீகரிக் கப்பட்ட பதவியணி | 2011.12.31 இல் உள்ளவாறு தற்போதைய பதவியணி | வெற்றி டங்கள் |
|---|---|---|---|---|
| | நூலகர் | 1 | 0 | 1 |
| | செலவாக்குதல் அலுவலர் | 15 | 1 | 10 |
| | கணக்கு அலுவலர் | | 4 | |
| | நிருவாக அலுவலர் | 5 | 1 | 4 |
| | சட்ட அமுலாக்கல் அலுவலர் | 3 | 2 | 1 |
| | விசாரணை அலுவலர் | 200 | 161 | 39 |
| **எம்ஏ 2-2** | **முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல்** | | | |
| | கணக்கு பதியுநர் | 1 | 0 | 1 |
| **எம்ஏ 1-2** | **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பவியல் அல்லாதவர்)** | | | |
| | முகாமைத்துவ உதவியாளர் | 31 | 24 | 7 |
| **பிஎல் 3** | **ஆரம்ப மட்ட தேர்ச்சியுடையவர்கள்** | | | |
| | சாரதி | 18 | 11 | 7 |
| **பிஎல் 1** | **ஆரம்ப மட்ட தேர்ச்சியற்றவர்கள்** | | | |
| | அலுவலக உதவியாளர் | 14 | 12 | 2 |
| | **மொத்தம்** | **370** | **237** | **133** |

இ. பணியாட்களை ஊக்குவித்தல் மற்றும் பணியாட்களின் நலன்புரி

இந்த வருடத்தின்போது, பணியாட்களுக்கு மனோரம்யம் மற்றும் சாதகமான தொழில் புரியும் சூழலை வழங்குவதற்கென மருத்துவ காப்புறுதிச் சேவை, கலாசார மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்கள், பணியாளர் ஊக்குவிப்புத் திட்டம், பணியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், பணியாளரை அங்கீகரித்தல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

ஈ. பாவைனயாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்திற்கான திருத்தங்கள்

இறுதி வரைவு சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தின் அங்கீகாரத்துக்கென அனுப்பி வைக்கப்பட்டது.

## பாவனையாளர் அலுவல்கள் பேரவை – 2012

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் பேரவையானது நிருவாக ரீதியாகப் பணிபுரிகிறது. குறிப்பாக, போட்டிக்கு எதிராக நடைமுறைகள் பற்றிய விடயங்கள் தொடர்பாக அதிகாரசபையினால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படும் விண்ணப்பங்களை விசாரித்து, தீர்மானிப்பதற்கான தத்துவங்களும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், மிகை விலையிடல், சந்தை பூரணத்துவமின்மை மற்றும் சந்தை கையாளுகைகள் ஆகிய விடயங்களும் புலனாய்வுகளுக்கென பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படுகிறது. விற்பனை செய்யப்படும் பண்டங்கள் அல்லது வழங்கப்படும் சேவைகளின் விலைகள் பற்றிய உச்ச வரம்பிடலைச் சிபார்சு செய்வதற்கும் பேரவைக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள்/ ஆற்றுப்படுத்துகைகள்

| பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு | முறைப்பாடுகள்/ ஆற்றுப்படுத்துகைகளின் எண்ணிக்கை | தீர்த்துவைக்கப்பட்டவைகள்/ தீர்மானிக்கப்பட்டவைகள் தீர்ப்புகள்/ சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரிவு 38<br>போட்டிக்கு எதிரான நடவடிக்கைகள் | 7 | 3 |
| பிரிவு 19<br>அதிகூடிய சில்லறை விலை | 4 | 5 |
| பிரிவு 19<br>நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகள் | 2 | 3 |

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை பற்றிய கூற்று

| | 2012.12.31 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000' | 2011.12.31 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000' |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 69,063 | 29,798 |
| முதிர்வுறும் வரை வகைப்படுததப்பட்ட சொத்துகள் | 125,239 | 74,420 |
| ஏனைய நடைமுறையற்ற நிதிசார் சொத்துகள் (ஊழியர் கடன்) | 6,089 | 7,736 |
| பிற்போடப்பட்ட ஊழியர் செலவு | 2,350 | 2,656 |
| | 202,742 | 114,610 |
| விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் | 324 | - |
| | 203,066 | |
| **நடைமுறைச் சொத்துகள்** | | |
| பொருட்கணக்கெடுப்பு/ கையிருப்புகள் | 1,117 | 1,168 |
| | 18,579 | 17,600 |
| வர்த்தகம் ஏனைய பெறுகைகள் | 6,492 | 7,034 |
| அரசாங்க படுகடனாளிகள் | ] | 21,838 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 9,865 | 23,520 |
| | 36,053 | 71,159 |
| மொத்த சொத்துகள் | 239,120 | 185,769 |
| | | |
| **பொறுப்புகள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | |
| திரட்டிய (அட்டுறு) செலவினங்கள் | 19,651 | 17,312 |
| செலுத்தப்பட வேண்டியவைகளும் ஏனைய பொறுப்புகளும் | 3,321 | 4,608 |
| | 22,972 | 21,920 |
| | | |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | |

| | 2012.12.31 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000’ | 2011.12.31 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000’ |
|---|---|---|
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17,833 | 14,127 |
| | 17,833 | 14,127 |
| மொத்த பொறுப்புகள் | 40,805 | 36,047 |
| | | |
| **மொத்த தேறிய சொத்துகள்** | 198,315 | 149,723 |
| | | |
| தேறிய சொத்துகள்/ உரிமைப்பங்கு | | |
| திரண்ட நிதி | 63,191 | 63,191 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 69,387 | 35,409 |
| ஒதுக்குகள் | 65,736 | 51,124 |
| | 198,314 | 149,723 |
| **மொத்த தேறிய சொத்துகள்/ உரிமைப்பங்கு** | 198,314 | 149,723 |

நிதி பணிப்பாளர்

பா.அ.அ.

பணிப்பாளர் நாயகம்

பா.அ.அ.

தவிசாளர்

பா.அ.அ.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை பற்றிய கூற்று

| | 2011.01.01 இல் உள்ளவாறு SLAS இலங்கை ரூபா. 000' | மீள் அளவீடுகள் 2011 இலங்கை ரூபா. 000' | 2011.01.01 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000' |
|---|---|---|---|
| சொத்துகள் | | | |
| நடைமுறையற்ற சொத்துகள் | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 29,713 | - | 29,713 |
| முதிர்வுறும் வரை வகைப்படுதுதப்பட்ட சொத்துகள் | 52,992 | - | 52,992 |
| ஏனைய நடைமுறையற்ற நிதிசார் சொத்துகள் (ஊழியர் கடன்) | 10,277 | 2,512 | 7,765 |
| பிற்போடப்பட்ட ஊழியர் செலவு | - | (2,512) | 2,512 |
| | 92,982 | - | 92,982 |
| விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் | | - | |
| | | | |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| பொருட்கணக்கெடுப்பு/ கையிருப்புகள் | 446 | - | 446 |
| வர்த்தகம் ஏனைய பெறுகைகள் | 7,740 | (242) | 7,982 |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துகள் | 5,985 | - | 5,985 |
| அரசாங்க படுகடனாளிகள் | 21,838 | - | 21,838 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 39,448 | - | 39,448 |
| | 75,458 | (242) | 75,699 |
| **மொத்த சொத்துகள்** | 168,439 | (242) | 168,680 |
| | | | |
| **பொறுப்புகள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| திரட்டிய (அட்டுறு) செலவினங்கள் | 15,704 | - | 15,704 |

| | 2011.01.01 இல் உள்ளவாறு SLAS இலங்கை ரூபா. 000’ | மீள் அளவீடுகள் 2011 இலங்கை ரூபா. 000’ | 2011.01.01 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000’ |
|---|---|---|---|
| செலுத்தப்பட வேண்டியவைகளும் ஏனைய பொறுப்புகளும் | 1,893 | - | 1,893 |
| | 17,597 | - | 17,597 |
| | | | |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 11,564 | - | 11,564 |
| | 11,564 | - | 11,564 |
| மொத்த பொறுப்புகள் | 29,161 | - | 29,161 |
| | | | |
| **மொத்த தேறிய சொத்துகள்** | **139,278** | **(242)** | **139,520** |
| | | | |
| **தேறிய சொத்துகள்/ உரிமைப்பங்கு** | | | |
| **திரண்ட நிதி** | 63,191 | - | 63,191 |
| **பிற்போடப்பட்ட வருமானம்** | 37,520 | - | 37,520 |
| **ஒதுக்குகள்** | 38,567 | (242) | 38,809 |
| | 139,278 | (242) | 139,520 |
| **மொத்த தேறிய சொத்துகள்/ உரிமைப்பங்கு** | **139,278** | **(242)** | **139,520** |

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று

| | 2011.01.01 இல் உள்ளவாறு SLAS இலங்கை ரூபா. 000' | மீள் அளவீடுகள் 2011 இலங்கை ரூபா. 000' | 2011.12.31 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000' |
|---|---|---|---|
| சொத்துகள் | | | |
| நடைமுறையற்ற சொத்துகள் | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 29,798 | - | 29,798 |
| முதிர்வுறும் வரை வகைப்படுததப்பட்ட சொத்துகள் | 74,420 | - | 74,420 |
| ஏனைய நடைமுறையற்ற நிதிசார் சொத்துகள் (ஊழியர் கடன்) | 10,392 | 2,656 | 7,736 |
| பிற்போடப்பட்ட ஊழியர் செலவு | - | (2,656) | 2,656 |
| | 114,610 | - | 114,610 |
| விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் | | - | |
| | | | |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| பொருட்கணக்கெடுப்பு/ கையிருப்புகள் | 1,168 | - | 1,168 |
| வர்த்தகம் ஏனைய பெறுகைகள் | 17,661 | 61 | 17,600 |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துகள் | 7,034 | - | 7,034 |
| அரசாங்க படுகடனாளிகள் | 21,838 | - | 21,838 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 23,520 | - | 23,520 |
| | 71,221 | 61 | 71,159 |
| **மொத்த சொத்துகள்** | **185,831** | **61** | **185,769** |
| | | | |
| **பொறுப்புகள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| திரட்டிய (அட்டுறு) செலவினங்கள் | 17,312 | - | 17,312 |

| | 2011.01.01 இல் உள்ளவாறு SLAS இலங்கை ரூபா. 000' | மீள் அளவீடுகள் 2011 இலங்கை ரூபா. 000' | 2011.12.31 இல் உள்ளவாறு SLFRS இலங்கை ரூபா. 000' |
|---|---|---|---|
| செலுத்தப்பட வேண்டியவைகளும் ஏனைய பொறுப்புகளும் | 4,608 | - | 4,608 |
| | 21,920 | - | 21,920 |
| | | | |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 14,127 | - | 14,127 |
| | 14,127 | - | 14,127 |
| மொத்த பொறுப்புகள் | 36,047 | - | 36,047 |
| | | | |
| **மொத்த தேறிய சொத்துகள்** | **149,785** | **61** | **149,723** |
| | | | |
| **தேறிய சொத்துகள்/ உரிமைப்பங்கு** | | | |
| **திரண்ட நிதி** | 63,191 | - | 63,191 |
| **பிற்போடப்பட்ட வருமானம்** | 35,409 | - | 35,409 |
| **ஒதுக்குகள்** | 51,185 | 61 | 51,124 |
| | 149,785 | 61 | 149,723 |
| **மொத்த தேறிய சொத்துகள்/ உரிமைப்பங்கு** | **149,785** | **61** | **149,723** |

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான விரிவான வருமானம் பற்றிய கூற்று

| | 2012.12.31 இல் உள்ளவாறு SLFRS | 2011.12.31 இல் உள்ளவாறு SLFRS |
|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | | |
| மீண்டுவரும் கொடை | 159,222 | 161,629 |
| குற்றப்பண வருமானம் | 34,529 | 30,850 |
| ஏனைய வருமானம் | 21,717 | 17,213 |
| | 215,468 | 209,692 |
| | | |
| செயற்பாட்டு செலவினங்கள் | | |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 116,122 | 109,548 |
| போக்குவரத்து (பிரயாணம்) | 9,664 | 9,230 |
| வழங்கல்கள் மற்றும் நுகரப்படுபவைகள் | 11,055 | 7,598 |
| பராமரிப்பு | 4,364 | 3,108 |
| ஒப்பந்த சேவைகள் | 39,233 | 36,148 |
| தேய்மானம் | 11,680 | 8,060 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 17,518 | 22,095 |
| மொத்த செயற்பாட்டு செலவினங்கள் | 209,636<br>======= | 195,788<br>====== |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை/ (பற்றாக்குறை) | 5,832 | 13,905 |
| | | |

| | 2012.12.31 இல் உள்ளவாறு SLFRS | 2011.12.31 இல் உள்ளவாறு SLFRS |
|---|---|---|
| நிதிச் செலவு | 128 | 84 |
| மொத்த செயற்பாடற்ற செலவினங்கள் | **128** | **84** |
| மேலதிக சாதாரண விடயங்களுக்கு முன்னரான தேறிய மிகை / (பற்றாக்குறை) | 5,704 | 13,821 |
| ஏனைய விரிவான வருமானம் | | |
| சொத்துக்களின் விற்பனை மூலமான இலாபம் | 1,061 | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் மீள மதிப்பிடல் மூலமான இலாபம் | - | - |
| மொத்த விரிவான வருமானம் | 6,766<br>===== | 13,821<br>====== |

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2012<br>இலங்கை ரூபா 000' | 2011<br>இலங்கை ரூபா 000' |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| சாதாரண செயற்பாடுகளிலிருந்து மிகை/ (பற்றாக்குறை) | 5,704 | 12,618 |
| சொத்து விற்பனை மூலம் இலாபம் / (நட்டம்) | 1,062 | - |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் | 11,680 | 8,061 |
| பணிக்கொடை வழங்கலில் அதிகரிப்பு | 3,706 | 2,562 |
| தவணை முறைக் கடன் கரைப்பு | 25 | 25 |
| **செயற்படு மூலதனம் மாறுவதற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **22,177** | **23,266** |
| செலுத்துகைகளில் அதிகரிப்பு | 1,051 | 4,324 |
| ஏனைய நடைமுறைச் சொத்துகளில் அதிகரிப்பு | 21,404 | (11,692) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | 44,632 | 15,898 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (53,014) | (8,172) |
| பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்து தொடருகைகள் | 1,831 | - |
| முதலீடுகளின் அதிகரிப்பு | (50,819) | (21,428) |
| நீண்டகால கடன்களின் அதிகரிப்பு | 1,952 | (115) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | **(100,050)** | **(29,715)** |

| | 2012<br><br>இலங்கை ரூபா 000' | 2011<br><br>இலங்கை ரூபா 000' |
|---|---|---|
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | |
| னுநகநசசநன ைெஉழஅந | 33,978 | (2,111) |
| ஊழுளுரஅநச "சழவநஉவழைெ குரனெ.:. சுநளநசஎநள | 7,785 | - |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | 41,763 | (2,111) |
| | | |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | (13,655) | (15,928) |
| **காலப்பகுதி ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | 23,520 | 39,448 |
| **காலப்பகுதி முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **9,865** | **23,520** |

## கணக்குகள் பற்றிய குறிப்புகள்

**1. கூட்டிணைத் தகவல்**

1.1 1979 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 173) ஆகியவற்றை நீக்கியதன் மூலம் 2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

2011 செம்ரெம்பர் 15ஆம் திகதிய பகிரங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/58/02 இன் பிரகாரம், ஒழுங்காக்கல் முகவராண்மைகளின் உப பிரிவு 'அ' என்ற பகுதியின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**1.2 முதன்மைச் செய்றபாடுகளும் நடவடிக்கைகளின் தன்மைகளும்**

பாவனையாளர்களைப் பாதுகாப்பதும் வர்த்தகத்தை ஒழுங்காக்குவதும் அதிகாரசபையின் முதன்மை (பிரதான) செயற்பாடாகும்.

1.3 2012 ஆம் ஆண்டின் முடிவில் உள்ளவாறு அதிகாரசபையின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 241 ஆகும்.

**1.4 முக்கியமான பங்குகளை வைத்திருத்தல் (பங்குடைமை)/ உரிமைப்பங்கு**

திறைசேரி பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு பிரதான நிதியளிப்புச் செய்கின்றது. அதிகாரசபையின் நேரடி வருமானமாகிய குற்றப்பணங்களின் 1/3 பகுதியினால் உருவாக்கப்பட்டதே நிதியின் தேறிய நிலுவையாகும். அது அதிகாரசபையின் உரிமைப் பங்கினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது.

1.5 இலக்கு வைக்கப்பட்ட திடீர் சோதனை மற்றும் பாவனையாளர் விழிப்பூட்டல் தொடர்பான செலவினங்களை மேற்கொள்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திறைசேரி நிதி போதியளவாக இருக்காமையினால் 2012.07.19 ஆம் திகதிய பொது திறைசேரி கடிதத்தின் தொடர்பு இல. BD/356/155/265IR மூலமாக அரசாங்க

படுகடனாளிகளின் கீழ் காட்டப்பட்ட தொகையான இலங்கை ரூபா. 21,837,974.52 செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதோடு அவ்விடயத்திற்கு இலங்கை ரூபா. 14 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

1.6 சொத்துகள் தொடர்பான அரசாங்க கொடைகள் மற்றும் நியாய பெறுமதியுடைய நாணயம் (பணம்) அற்ற கொடைகள் ஆகியவை பிற்போடப்பட்ட வருமானம் என ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. 2011.12.31 இல் உள்ளவாறு தேறிய சொத்தின் பெறுமதி மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசம் எனக் காட்டப்பட்டுள்ள ரூபா. 6,585,559/- ஒதுக்குக் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

## 2. பொது கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தராதரங்களுக்கு (SLFRS) அமைவாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடம் அடங்கலாக சகல காலப்பகுதிக்குமென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைவாக அதன் நிதிக் கூற்றுகளைத் தயாரித்துள்ளது. 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான இந்த நிதிக் கூற்றுகளே, இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தராதரங்களுக்கு அமைவாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் முதலாவதாகத் தயாரிக்கப்பட்டதாகும்.

2.2 முதலீடுகள், ஆதனங்கள், மோட்டார் வாகனங்கள் ஆகியவை தவிர, நிதிக் கூற்றுகள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு முதிர்வுறு நிதிச் சொத்துகளாக வைக்கப்பட்டு நியாய பெறுமதியில் அளவீடு செய்யப்பட்டிருக்கின்றன.

### 2.3 குற்றப்பண வருமானம்

2.3.1 குற்றப்பணத்திலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் அதிகாரசபையின் பொதுச் செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்படாமையால், முன்னர் அது வருமானக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து, பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இந்த வருமானத்தை உபயோகிக்கிறது. எனவே, குற்றப்பண வருமானம் வருமானமாகக் கருதப்பட்டு, அதனுடன் தொடர்புடைய சகல செலவினங்களும் வருமானங்களும் வருமான – செலவினக் கணக்கில் காட்டப்படுகிறது.

2.3.2 அதிகாரசபை பணத்தை குற்றப்பண வருமானமாகப் பெற்றுக் கொள்ளும் சில சந்தர்ப்பங்கள் உள்ளன. மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் திடீர் சோதனை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைக்கும், சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் தமது அனுப்புகைகளுடன் வழங்கிய எண்ணிக்கைகளுக்குமிடையில் வேறுபாடுகள் உள்ள அதேவேளையில் அவ்வருமானம் அங்கீகரிக்கப்படாத ஒன்றாகும். அவை உண்மையில் அதிகாரசபைக்கு உரித்தானவையா அல்லது நீதிமன்றினால் தவறுதலாக அனுப்பிவைக்கப்பட்டவையா என பரிசீலிக்கும் நோக்கத்துடன் பொதுவாக தொங்கல் - குற்றப்பண வருமான கணக்கிற்கு மாற்றப்படுகிறது. அத்தகைய பணம் வருட முடிவு வரையில் அங்கீகரிக்கப்படாத ஒன்றாக இருப்பின், அது அதிகாரசபையின் பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்தில் பற்று வைக்கப்படும்.

2.4 நிதியாண்டு

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுறும் பஞ்சாங்க வருடமே அதிகாரசபையின் நிதியாண்டாகும்.

## 2.5 IFRS (SLFRS) ஐ முதற் தடவையாக ஏற்றுக்கொள்ளல்

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான நிதிக் கூற்றுகளே SLFRS இற்கு அமைவாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் முதன் முதலில் தயாரிக்கப்பட்டுள்ளது. 2011.12.31 இல் முடிவுற்ற வருடம் அடங்கலாக, காலப்பகுதி வரையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, பகிரங்கத்துறை கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைவாக அதன் நிதிக் கூற்றுகளைத் தயாரித்தது.

அதன் பிரகாரம், கணக்கீட்டுக் கொள்கைகளில் விபரிக்கப்பட்டவாறு, 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான மற்றும் அத்திகதியில் உள்ளவாறான ஒப்பீட்டுக் காலப்பகுதி தரவுடன் 2012 டிசெம்பர் 31 திகதியில் அல்லது அதற்குப் பின்னர் முடிவுறும் காலப்பகுதிகளுக்கு உரித்தான SLFRS ற்கு அமைவான (இணங்கியொழுகும்) நிதிக் கூற்றுகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தயாரித்துள்ளது. இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலில் SLFRS இற்கு மாற்றப்பட்ட பாவனையார் அலுவல்கள் அதிகாரசபையின் திகதியான 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதி நிலைமை பற்றிய ஆரம்ப கூற்று தயாரிக்கப்பட்டது.

இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தராதரங்களின் முதற் தடவை SLFRS 1, ஏற்றுக் கொள்ளலானது, சில SLFRS இன் சில கடந்த காலப் பிரயோகங்களிலிருந்து சில விதிவிலக்குகளை முதல் தடவையாக ஏற்றுக்கொள்பவர்களுக்கு அனுமதிக்கிறது.

**ஆதனம், பொறி, உபகரணம் ஆகியவற்றின் நியாயமான பெறுமதி**

முதல் தடவையாக ஏற்றுக் கொள்பவர் மாறும் திகதியில் அதன் நியாய பெறுமதியில் ஆதனம், பொறி, உபகரணம் ஆகியவற்றின் ஏதேனும் வகையை அளவீடு செய்யலாம். இந்த விதிவிலக்கானது சொத்துகளின் வகைகளை அல்லது சொத்துகளின் பிரிவுகளை அதன் அளவீட்டுப் பிரிவாக கருதவில்லை. ஆயினும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்றைக் குறிப்பிடுகிறது என்பதை அவதானிப்பது முக்கியமானது. இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் SLAS 18 ஆனது அளவீட்டுப் பிரிவை அங்கீகாரத்திற்கென குறித்துரைக்கவில்லை. (அ-து) ஆதனம், பொறி, உபகரணம் ஆகியவற்றின் வகையைக் கொண்டிருப்பதாகும். மேலும், நிறுவனமொன்றின் விசேட சூழமைவுகளில் அங்கீகாரத்துக்கான தகவுதிறனைப் பிரயோகிப்பதில் தீர்மானம் தேவைப்படுகிறது. எனவே முதற் தடவையாக ஏற்றுக் கொள்பவர் அதன் சொத்துக்களில் சிலவற்றுக்கு மட்டும் அல்லது சகலதுக்குமான செலவு விதிவிலக்கை பிரயோகிக்க முடியும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை 2010 ஆம் ஆண்டில் அதன் மோட்டார் வாகனங்களை மீள் மதிப்பீடு செய்துள்ளதுடன் கொள்கை அடிப்படையில் 5 வருடங்களுக்கொருமுறை மீள்மதிப்பிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். சொத்துக்களின் ஏனைய வகைகளின் மீள்மதிப்பிடலானது பொருளாதார ரீதியாக நன்மையளிக்காது. எனவே, பொருளாதார நன்மை மற்றும் சொத்துகளின் தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, சொத்துகளின் ஏனைய வகைகளுக்கான மீள்மதிப்பீடானது மாற்றீட்டு வேளையின்போது மேற்கொள்ளப்படவில்லை. எனவே, ஏனைய நடைமுறையற்ற சொத்துகள் நியாய பெறுமதி முறைக்கு மாற்றியமைக்கப்படவில்லை.

## 3. சொத்து அடிப்படைகளும் அவற்றின் விலை மதிப்பிடலும்

3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆக்கக்கூறுகளைப் பிரதியீடு செய்தல் அடங்கலான தேறிய திரண்ட தேய்மானம், செலவு ஆகியவை தொடர்பாக ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்கள் கூறப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதி பிரதியீடு செய்யப்படும்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, பிரதியிடப்பட்ட பகுதியை அங்கீகரிக்காது, புதிய பகுதியை அதன் சம்பந்தப்பட்ட பாவனைக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கிறது. பழுதுபார்த்தல் மற்றும் பேணுகைச் செலவுகள் நிகழ்ந்ததாக வருமானக் கூற்றில் மீள அங்கீகரிக்கப்படுகிறது.

ஏதேனும் மீள்மதிப்பிடல் மிகையானது, ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகாரிக்கப்படுவதுடன் சொத்து மீள்மதிப்பிடல் ஒதுக்களில் உள்ள உரிமையாண்மைப் பங்கில் திரட்டி வைக்கப்படுகிறது.

3.1.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஆகுசெலவு/ கிரயம் என்பது கொள்வனவு அல்லது அதனது உத்தேசிக்கப்பட்ட உபயோகத்திற்கென தொழிற்படும்/ இயங்கும் நிலைமைக்கு கொண்டுவருவதற்காக ஏற்பட்ட ஏதேனும் செலவினங்களுடனான நிர்மாணச் செலவு ஆகும்.

3.1.3 சொத்துக்களின் பாவனைக் காலத்தை அதிகரிப்பதற்கு அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிரந்தர தன்மையின் மூலம் அவற்றின் சுவீகரிப்பு, விரிவாக்கல் அல்லது மேம்படுத்துகை நோக்கங்களுக்காக ஏற்பட்ட செலவினம், மூலதனச் செலவினமாகக் கருதப்படுகிறது.

3.1.4 150ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஐந்து வாகனங்கள், (04 ரொயோட்டா ஹையேஸ் வான் மற்றும் 01 ரொயோட்டா மோட்டார் கார்) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வாகனத் தொகுதியில் சேர்க்கப்பட்டது. விலைப்பட்டியல் பெறுமதியான இலங்கை ரூபா 48,848,357/- ஆனது நாணயமற்ற கொடையாக கருதப்பட்டு அவ்வாறே கணக்கிலிடப்பட்டது.

## 3.2 **தேய்மானம்**

பெற்றுக் கொள்ளப்பட்ட சகல சொத்துகளும் தேய்மானம் அடைந்திருந்தன. மாத ஆரம்பத்திலிருந்து அந்த சொத்து அதிகாரசபையின் பாவனைக்கென கிடைக்கப்பெறும்.

3.2.1 பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக்காலம் தொடர்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் செலவைப் பதிவழிப்பதற்கென மாறாத அடிப்படையில் தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| அலுவலக தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10% |
| அலுவலக உபகரணம் | 10% |
| கணனி உபகரணம் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| அலுவலக பிரிவிடல்கள் | 20% |
| நுகர முடியாதவைகள் | 10% |

3.2.2 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது தேய்மானத்தை கணிப்பிடும்போது நேர்கோட்டு முறையை உபயோகிக்கிறது.

3.2.3 நூலக புத்தகங்களுக்கென தேய்மானம் கணிக்கப்படவில்லை.

3.2.4 சம்பந்தப்பட்ட வருடத்துக்கான தேய்மானப் பெறுமதி பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

3.3 கட்டிடத் தொகுதிகள் - குருநாகல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் குருநாகல் மாவட்ட அலுவலக கட்டிடத் தொகுதிக்கென குருநாகல் மாவட்டச் செயலாளரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கொடுப்பனவாகிய ரூபா 1 மில்லியன், 40 வருடங்களுக்கு மேலாக தவணை முறையில் கடன் கரைப்புச் செய்யப்பட்டது.

3.4 **படுகடனாளிகள் மற்றும் பெறுகைகள்**

தொகையில் கூறப்பட்ட படுகடனாளிகள் மற்றும் பெறுகைகள் தீர்க்கப்படுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

3.5 பொருட்பதிவுகள் குறைந்த விலையில் அல்லது தேறிய தீர்க்கப்படக்கூடிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

3.6 **காசு மற்றும் காசுக்குச் சமமானவை**

காசு மற்றும் காசுக்குச் சமமானவை கையிருப்பில் உள்ள காசாக, வங்கியில் உள்ள காசாக மற்றும் குறுகிய கால முதலீடாக வரையறுக்கப்பட்டுள்ளன.

3.6.1 காசுப்பாயச்சல் கூற்று தேவைக்காக, காசு மற்றும் காசுக்குச் சமமானவை கையிருப்பில் உள்ள காசு, மற்றும் வங்கியில் உள்ள காசு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

## 3.7 நிதிக்கருவிகள் (நிதிச் சாதனங்கள்)

### 3.7.1 முதிர்வுறு முதலீடுகளாக வைத்திருத்தல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிரந்தர வைப்புகளானவை முதிர்வுறு முதலீடுகளாக வைத்திருத்தல் என வகைப்படுத்தப்படுகிறது. ஏனெனில், அது நிரந்தர கொடுப்பனவுகள் மற்றும் நிரந்தர முதிர்ச்சிகளுடன் உய்த்தறியப்படாத தரத்தைக் கொண்டிருக்கும். நிரந்தர வைப்புகள் ஆரம்பத்தில் செலவாக அளவீடு செய்யப்படுகிறது. தொடக்க அங்கீகரிப்பைத் தொடர்ந்து, பயனுறுதிமிக்க வட்டி முறையை உபயோகித்து, நிரந்தர வைப்புகளானவை காலத் தேய்மானமற்ற செலவில் கூறப்படுகிறது. நிரந்தர வைப்புகளின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்திலிருந்து இலாபம் அல்லது நட்டம் அவை எழும் காலப்பகுதியில் உள்ள வருமானக் கூற்றில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. வருடாந்த திறைசேரி முறி வட்டி வீதத்தை உபயோகித்து கழிவு வீத அடிப்படையில் நியாய பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

குறித்த காலப் பகுதியினுள் நிரந்தர வைப்புகள் மீளப் பெறப்படுவதில்லை எனும் கடந்தகால அனுபவத்தை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கொண்டிருப்பதால், நிரந்தர வைப்புகளில் பெரும்பாலானவை ஆகக்குறைந்தது 03 வருடங்களுக்கு நிலைத்திருக்குமென கருதப்படுகிறது.

### 3.7.2 முதிர்வுறுவதற்கு வைக்கப்பட்டுள்ள நடைமுறையற்ற சொத்துகள்

விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறையற்ற சொத்துகள் மற்றும் விலக்கல்கள் (விற்பனைக்குரியவை) ஆகியவை அவற்றின் முன்கொண்டு செல்லப்படும் தொகையை விட குறைந்த அளவில் அளவீடு செய்யப்பட்டு விற்பனைக்காக செலவுகள் தவிர்ந்த நியாய பெறுமதியாகும்.

## 4. பெறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 4.1 செலுத்தப்பட வேண்டியவைகள்

செலுத்தப்பட வேண்டியவைகள் அவற்றின் செலவுகளில் கூறப்படுகிறது.

### 4.2 இளைப்பாறு பயன்பாட்டுக் கடப்பாடு

கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய இரண்டு வரையறுக்கப்பட்ட நன்மைகள் உடைய ஓய்வூதிய திட்டங்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கொண்டுள்ளது.

4.2.1 **வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுத் திட்டம் - பணிக்கொடை**

பணிக்கொடையென்பது வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுத் திட்டமாகும். சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்களின் பிரகாரம், அதிகாரசபை பணிக்கொடையைச் செலுத்த வேண்டிய கடப்பாடு உடையது. இந்த கடப்பாட்டை (பொறுப்பை) எதிர்கொள்வதற்கென, ஐந்தொகையில் ஏற்பாடு ஒன்று முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இது, சேவையின் முதல் வருடத்திலிருந்து சேவை முடிவுறுத்தப்பட்ட ஒவ்வொரு வருடத்துக்குமென சகல ஊழியர்களுக்கும் நிதியாண்டின் இறுதி மாதத்தின் மாதாந்த சம்பள அடிப்படையிலே கணிப்பீடு செய்யப்படும் ஒரு தொகைக்குச் சமனானதாகும். வருட ஆரம்பத்தில் முன்கொண்டு செல்லப்பட்ட ஏற்பாட்டிற்கும் வருட முடிவில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாட்டிற்கும் இடையில் ஏற்படும் வேறுபாடானது வருமானக் கூற்றில் கையாளப்படுகிறது.

LKAS இன் பிரகாரம் ஆகக் குறைந்த அளவான ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கான பணிக்கொட ஏற்பாடு கணிக்கப்படுகிறது. பொது திறைசேரி முன்கூட்டியே நிதியை விடுவிக்காததால், பணிக்கொடை திட்டத்திற்கு ஆதரவாக ஏதேனும் நிதியை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை முதலீடு செய்திருக்கவில்லை.

தேவைப்படும் பொறுப்பு முதலீடு செய்யப்படாதிருப்பதால், காப்புறுதிக் கணக்கின் இலாபம் அல்லது நட்டங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. எனினும், வருடாந்த திறைசேரி முறி வட்டி வீதத்தினடிப்படையில் கழிவு வீதத்தை உபயோகிக்கும் வரையறுக்கப்பட்ட பயன்பாடுகளின் தற்போதைய பெறுமதியை வரையறுக்கப்பட்ட பயன்பாடுகளின் பொறுப்புகளை கொண்டமைந்ததாகும்.

4.2.2 **வரையறுக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்கள்/ ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்காக்கலுக்கு அமைவாக சகல ஊழியர்களும் ஊ.சே.நி. (EPF) மற்றும் ஊ.ந.நி. (ETF) கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்கள். ஊழியர்களின் காப்புறுதியான சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள், வருமானக் கூற்றில் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஊழியரின் மொத்த ஊதியத்தில் 15% மற்றும் 3% ஐ அதிகாரசபை முறையே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் கொடுப்பனவு செய்கிறது.

## 5. வருமானம்

இறைவரி அங்கீகாரம்

இறைவரி என்பது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு எந்த அளவிற்குச் சென்றடையக்கூடிய சாத்தியத்துடனான அங்கீகாரம் மற்றும் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படக்கூடியதுமாகும்.

**வரி வருமானம்**

வட்டியை ஈட்டிக் கொடுக்கும் நிதிச் சொத்துகள் (நிரந்தர வைப்புகள்) முதிர்வுறும் நிதிச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டு, நிதிச் சொத்துகளின் தேறிய காவு தொகைக்கு பொருத்தமான இடங்களில் நிதிக் கருவிகளின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் அல்லது குறுகிய காலம் மூலமாக உத்தேசிக்கப்பட்ட எதிர்கால பொறுகைகளின் உண்மையான கழிவு வழங்கும் அறவீடான பயனுறுதிமிக்க வட்டி வீதமாக (EIR) உபயோகித்து வட்டி வருமானம் பதிவு செய்யப்படுகிறது. வட்டி வருமானமானது வருமானக் கூற்றில் உள்ள நிதி வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

அரசாங்க கொடைகள்

கொடைகள் கிடைக்கப் பெறும் என்பதற்கான நியாயமான உறுதியுரை மற்றும் அதனுடன் இணைந்த நிபந்தனைகள் இணங்கியொழுகப்படும் என்பன உள்ள இடங்களில் அரசாங்க கொடைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. செலவின விடயம் (மீண்டுவரும் கொடை) ஒன்றுடன் கொடைகள் தொடர்புறும் வேளையில், அது அக்காலப்பகுதிக்கான வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது. சொத்து விடயத்துடன் (மூலதனக் கொடை) கொடைகள் தொடர்புறும்போது அது பிற்போடப்பட்ட வருமானமாகவும் சம்பந்தப்பட்ட சொத்தின் ஆயுட்காலத்தின் போதான சமஅளவிலான விடுவிக்கப்பட்ட வருமானமாகவும் அங்கீகரிக்கப்படுகிறது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கண்காணிக்கப்படாத கொடைகளைப் பெறும் போது, சொத்துகளும் கொடைகளும், பெயரளவான தொகைகளில் மொத்தமாக பதிவு செய்யப்பட்டு, சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட (உத்தேசிக்கப்பட்ட) ஆயுட்காலம் தொடர்பாக வருமானக் கூற்றில் இடப்படுகிறது (IAS 20).

2011.12.31 இல் உள்ளவாறு உரிமைப் பங்கின் கணக்கிணக்கம் மற்றும் 2011.12.31 இல் முடிவுற்ற வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம் பற்றிய குறிப்புகள்

**அ. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள் மதிப்பிடல்**

ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ரூபா 10,622,670/- பெறுமதியில் மாற்றங்களுடன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதன் மோட்டார் வாகனங்களை (2011 ஆம் வருடம்) கொண்டுள்ளது. மீள் மதிப்பிடல் மிகையான ரூபா. 10,622,670/- பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது (வரவு வைக்கப்பட்டுள்ளது). எனவே, ரூ. 10,622,670/- ஆனது பிற்போடப்பட்ட கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய விரிவான வருமானத்திலும் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**ஆ. பிற்போடப்பட்ட வருமானம்**

கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதியானது, பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. மீள் மதிப்பிடல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வருடத்துக்கான தேய்மானம் ஆகியவற்றில் சேர்க்கப்பட்ட பெறுமதியும் அதே கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க, சொத்துகளின் தேறிய பிற்போடப்பட்ட வருமானம் மற்றும் தேறிய பெறுமதி ஆகியவை சமனாக இருக்க வேண்டும். மேற்படியான காரணத்தினால் எழும் ஏதேனும் வித்தியாசம் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு மாற்றப்படும்.

**இ. முதிர்வுறு நிதிக் கணக்குகள்**

**நிலையான வைப்புகள்**

நிலையான வைப்புகளின் நியாய விலையானது, SLFRS இன் கீழ் அங்கீகரிக்கப்படுகிறது. ஆனால் SLAS இன் கீழ் அங்கீகரிக்கப்படவில்லை. SLAS இன் கீழான நீண்டகால முதலீடுகளின் கீழ் நிலையான வைப்பாக குறித்துரைக்கப்பட்ட நிலையான வைப்புகள், முதிர்வுறு நிதிச் சொத்துகளாக SLFRS இற்கு நிலை மாறும் வகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது

.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இ
My No. } ரீசீ/ஈ/சீஏஏ/எப்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No }

දිනය
திகதி
Date } 2013 ஒக்தோபர் 31

தலைவர்,
நுகர்வோர் விவகார அதிகாரசபை

**நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2013 செப்தம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර
බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව

இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை இலங்கை

No.306/72, Polduwa Road,
Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 - 34

ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223

ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டின் போது வாகனங்கள் மாத்திம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டமை தவிர மீளாய்வாண்டில் ரூபா 30,822,356 பெறுமதியான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமையால் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கவில்லை.

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பு நிதியத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவு மீதியொன்றாக காட்டப்பட்ட ரூபா 133,374,156 தொகையில் ரூபா 128,570,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 4,804,156 தொகை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 (அ) பந்தி மற்றும் 1999 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபம் | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக அதிகாரசபையில் பிரதி/பதில் பணிப்பாளர்கள் 05 பேருக்கு முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 2012 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் ரூபா 7,500 வீதம் மாதாந்த போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய பீடி/ஜிபீஎஸ்/130/9/12 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபம் | வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் இடை நிறுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,840,000 செலவிடப்பட்டு வாடகை அடிப்படையில் 04 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதிகார சபைக்குச் சொந்தமாக 08 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், 2013 மே வரையில் இந்த வாடகை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு அதிகாரசபையின் செயற்பாடுகள் ரூபா 6,765,819 மிகையை விளைவித்திருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 13,821,071 ஆக இருந்தமையால், நிதி விளைவில் ரூபா 7,055,252 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. அதிகாரசபையின் முன்னைய ஆண்டின் செயற்பாட்டு செலவினம் ரூபா 195,786,572 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டில் அது ரூபா 209,636,046 ஆக இருந்தமையால் ரூபா13,849,474 அல்லது 7% ஆன செலவினங்களில் அதிகரிப்பு அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 60,588 சுற்றி வளைப்புக்களையும் புலனாய்வுகளையும் மேற்கொண்டு, ரூபா 242.35 மில்லியன் (அதிகாரசபைக்கு 1/3 மற்றும் அதிகார சபை மூலம் அரச வருமானத்திற்கு 2/3 உட்பட) வருமானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது 27,746 சுற்றி வளைப்புக்களும் புலனாய்வுகளும் மட்டும் மேற்கொள்ளப்பட்டு ரூபா 92.09 மில்லியனான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட சுற்றிவளைப்புக்களையும் புலனாய்வுகளையும் மேற்கொள்வதற்கு அல்லது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ஆ) 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 18(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமூகம் அல்லது அதன் ஒரு பகுதியினர் உயிர் வாழ்வதற்கு அத்தியவசியமானது என நிர்ணயிக்கப்பட்ட பொருட்கள், நிர்ணயிக்கப்பட்ட பொருட்களாகப் பெயரிடப்பட முடியுமாக இருப்பதுடன், அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவின் பிரகாரம், அவ்வாறு இனங்காணப்பட்ட பொருட்களின் சில்லறை அல்லது மொத்த விலையை

அதிகாரசபையின் முன் அங்கீகாரம் இல்லாமல் அதிகரிக்க முடியாது. அதன் பிரகாரம் அதிகாரசபையினால் 15 பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட பொருட்களாக பெயரிடப்பட்டு இனங்காணப்பட்டிருந்ததுடன், அதில் சீமேந்து, பெற்றோலியம், பால் உணவுகள், அரிசி மற்றும் கோழி இறைச்சி போன்ற 05 பொருட்களுக்காக மட்டும் விலைக் கட்டுப்பாட்டின் போது அதிகாரசபை தலையீடு செய்திருந்தது. எஞ்சிய பொருட்களின் விலைக்கட்டுப்பாட்டிற்காக அதிகாரசபை தலையீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விலைக் கட்டுப்பாட்டிற்காக தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(I) கோழி இறைச்சி

------------------------

(i) 2010 பெப்ரவரி 18 ஆந் திகதிய 1641/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம், அதிகுளிரூட்டப்பட்ட தோலுடன் கூடிய புறொய்லர் கோழி இறைச்சியை விற்பனை செய்யகூடிய உயர்ந்தபட்ச விலையொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும், தோல் அகற்றப்பட்ட, பகுதிகளாக விற்பனை செய்யப்படுகின்ற ஏனைய கோழி இறைச்சிக்காக அக்கட்டளை செல்லுபடியாகாமல் இருப்பதால் விலைக் கட்டுப்பாடு வெற்றிகரமாக இருக்கவில்லை.

(ii) எவ்வாறாயினும் 2012 ஒக்தோபர் 18 ஆம் திகதி வரையில் இவ்விலைக் கட்டுப்பாடு அகற்றப்பட்டிருந்த போதும் இறைச்சியின் விலைகள் ரூபா 380 இலிருந்து ரூபா 450 வரையான வீச்சில் விலை அதிகரித்திருந்ததாக அதிகாரசபையின் விலை முகாமைத்துவப் பிரிவு மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்விடயங்களை புலனாய்வு செய்து அறிக்கையிடுவதற்காக அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நுகர்வோர் சபைக்கு அறிக்கையிடப்பட வேண்டியிருந்ததுடன், அதிகாரச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறு அனுப்பிவைப்பதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் சபையால் தனது அறிக்கையை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

(II) பால்மா

------------

(i) முழு ஆடையுடன் கூடிய பால்மா

---------------------------------------------------------

04 கம்பனிகளால் இலாப எல்லை மற்றும் வரி உள்ளடக்கப்பட்ட கிரய மதிப்பீட்டைச் சமர்ப்பித்து பால்மாவின் விலையை அதிகரிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் 2012 மே 04 ஆந் திகதி 1756/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் 400 கிராம் பால்மா பைக்கற்று ஒன்றினதும் 1 கிலோ கிராம் பால்மா பைக்கற்று ஒன்றினதும் விலை முறையே ரூபா 61 ஆலும் ரூபா 163 ஆலும் அதிகரிப்பதற்கு அதிகாரசபையால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதில் ஒவ்வொரு கம்பனியும் சமர்ப்பித்திருந்த கிரய மதிப்பீட்டினை கருத்திற்கொள்ளாமல் பொதுவாக அக்கம்பனிகளால் விலையை அதிகரிப்பதற்கு கோரப்பட்ட விலையை விட கூடிய விலையொன்று கட்டுப்பாட்டு விலையாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனால் உற்பத்திக் கம்பனிகள் 400 கிராம் பால்மா பைக்கற்று ஒன்றிலிருந்தும் 01 கிலோ கிராம் பால்மா பைக்கற்று ஒன்றிலிருந்தும் முறையே ரூபா 9 முதல் ரூபா 40 மற்றும் ரூபா 47 முதல் ரூபா 110 வரையான இலாபத்தை மேலதிகமாக உழைத்துக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ii) கொழுப்பற்ற பால்மா

---------------------------------

2003 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 1302/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் பால் உணவுகள் நிர்ணயிக்கப்பட்ட பொருட்களாக கூறப்பட்டிருந்த போதிலும், கொழுப்பில்லாத பால்மாவிற்கு அதிகாரசபையால் கட்டுப்பாட்டு விலையொன்று நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் உற்பத்தியாளர்களும் விநியோகிப்பாளர்களும் அதிகாரசபையின் அனுமதி இல்லாமல் அவர்களுக்கு தேவையான வகையில் பால்மா விலையைத் தீர்மானித்து பேணப்பட்டு வந்திருந்தது.

(III) குழந்தைகளுக்கான பால் உணவு

-------------------------------------------------------

(i) மேற்படி 1302/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானிப் பத்திரத்தின் மூலம் பால் உணவு நிர்ணயிக்கப்பட்ட பொருளாக பெயரிடப்பட்டிருந்த போதிலும், 2012 யூன் 18 ஆம் திகதி வரையில் 09 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், அதிகாரசபை குழந்தைகளுக்கான பால்மா விலைகளை கட்டுப்படுத்த தலையீடு செய்திருக்கவில்லை. ஆகையால் உற்பத்தியாளர்களும் விநியோகத்தர்களும் தாம் விரும்பிய வகையில் குழந்தை பால்மா விலைகளைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

(ii) எவ்வாறாயினும் பின்னர் அதிகாரசபை 2012 யூன் 18 ஆந் திகதிய 1763/04 ஆம் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் குழந்தை பால் உணவுகளுக்கான விலையைக் கட்டுப்படுத்துவதற்குத் தலையீடு செய்திருந்த போதும் அவ்விலைய நிர்ணயிப்பது நியாயமில்லையென அதிகாரசபைக்கு எதிராக ஒரு கம்பனியால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

(iii) எவ்வாறாயினும் அதிகாரசபையால் கட்டுப்பாட்டு விலையை தீர்மானிக்கும் போது சந்தை விலை மற்றும் கிரய மதிப்பீடு மீளாய்வு செய்யப்படாமல் இருந்ததுடன், அதற்காக எடுகோள் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த எடுகோள்கள் நுகர்வோர் சபையாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக தொடரப்பட்டிருந்த வழக்குத் தொடர்பாக சபை விடயங்களை முறையாக ஆய்வு செய்யாதிருந்தமையால் மேற்படி வர்த்தமானி அறிவித்தலை நீக்கி புதிய அறிவித்தலொன்று வழங்கப்பட வேண்டுமென சட்டமா அதிபர் அதிகாரசபைக்கு அறிவித்திருந்தார். எனினும் 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(IV) சிமெந்து விலை

--------------------------

2006 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 146[illegible]/16 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் அனைத்து வகையான சீமெந்துகளும் நிர்ணயிக்கப்பட்ட பொருளாக பெயரிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணக் கம்பனிகளுககு

வழங்கப்பட்டிருந்த மொத்த அளவிலான (Bulk) சீமேந்திற்காக அவ்விலை தொடர்பு அற்றவையாக இருந்தது.

(V) கோதுமை மா

----------------------

2004 மே 23 ஆம் திகதிய 1342/11 ஆம் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் கோதுமை மா நிர்ணயிக்கப்பட்ட பொருளாக பெயரிடப்பட்டிருந்த போதிலும், உற்பத்தியாளர்கள் அதிகாரசபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். எனினும் அரச சட்டமா அதிபரால் இப்பொருள் பாவனை அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 18 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கட்டுப்படுத்தப்படும் ஒன்றாக இருந்ததால் விலையை அதிகரிக்கும் போது அதிகாரசபையின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், கோதுமை மாவின் விலைக் கட்டுப்பாடு தொடர்பாக அதிகாரசபையின் அதிகாரத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(VI) திரவ பெற்றோலியம் (எல்பீ) எரிவாயு

----------------------------------------------------------------

(i) 2012 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் முறையே 1,031 ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் 1,195 ஐக்கிய அமெரிக்க டொலர் அளவில் காணப்பட்ட 1 தொன் எரிவாயுவின் விலை 2012 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை 993 ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் 996 ஐக்கிய அமெரிக்க டொலர் வீச்சில் குறைவடைந்ததனை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி தலையிட்டு எல்பீ எரிவாயுவின் விலையை ரூபா 150 ஆல் குறைத்திருந்தது. இவ்வாறு விலை குறைவடையும் சந்தர்ப்பத்தில் அதிகாரசபை அதற்காக தலையிட்டிருக்கவில்லை.

(ii) லிட்ரோ மற்றும் லாப் ஆகிய 02 கம்பனிகளால் 2012 ஏப்ரல் மாதத்தில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் 2012 மே 04 ஆம் திகதி முதல் 12.5 கி.கிராம் எல்பீ எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை (கொழும்பு விலை) ரூபா 350 ஆல் அதிகரிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. விலையைத் தீர்மானிப்பதற்காக மேற்படி இரண்டு கம்பனிகளால் 2012 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுகளுக்குரிய மாதிரிப்பட்டியல் மட்டும்

அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் இரண்டு கம்பனிகளும் ஒரே வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்திருந்தமை அதுவரை அவர்களிடமிருந்த எஞ்சிய எல்பீ எரிவாயு இருப்பு, அதன் கப்பல் மாத்திரம் இலவசம் (FOB) பெறுமதி, சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெற்றுக்கொண்ட இருப்பின் அளவு போன்ற பெறுமதிகள் தொடர்பாக விலை அதிகரிக்கும் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(VII) மருந்துகள்

----------------

(அ) அதிகாரசபையால் மேற்கத்தைய மருந்துகளுக்காக ஆகக்குறைந்த சில்லறை விலையைத் தீர்மானிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இதனை தனியான அலகொன்றாக செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்காக ரூபா 3,616,000 தொகையான கிரய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்ட வகையில் கருத்திற் கொள்ளக்கூடிய செயன் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டின் போது மருந்துகள் வியாபாரம் தொடர்பாக ஆரம்ப புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கையின் பிரகாரம் மேற்கத்தைய மருந்து வகைகளில் சிலவற்றின் விலை, காப்புறுதி மற்றும் கேள்வு (CIF) பெறுமதியை விட சில்லறை விலையில் நூற்றுக்கு 276 – 787 வரை வீச்சிலான அதிகரிப்பொன்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அப்புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் நுகர்வோர் அலுவல்கள் சபையால் மேற்கத்தைய மருந்து வகைகள் தொடர்பாக 10 பிரதான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டு அதில் 06 இனை அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- நுகர்வோர் அலுவல்கள் சபையால் மேற்கத்தைய மருந்துகளின் விலை, காப்புறுதி மற்றும் கேள்வு (CIF) பெறுமதியில் நூற்றுக்கு 80 – 85 இற்கு இடைப்பட்ட வீச்சில் வைக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2002 ஒக்தோபர் 22 ஆம் திகதி அப்போது காணப்பட்ட மருந்துகளுக்கான விலைக் கட்டுப்பாட்டு வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கும் 2003 நுகர்வோர் விவகார அதிகாரசபை உருவாக்கப்பட்டதன் பின்னர் மீண்டும், விலைக் கட்டுப்பாடு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்காமையால் மருந்துகளின் விலை அதிகளவில் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது. இதில் பயனை அடைந்த மருந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தமது விருப்பின் பேரில் அதிக விலைகளை விதித்து நுகர்வோரை சுரண்டுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபை அது தொடர்பாக முறையான நடைமுறையை எடுத்திருக்கவில்லை.

- நுகர்வோர் விவகார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட 10 பரிந்துரைகளில் அதிகாரசபையால் நடைமுறைப்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த 06 இல் சகல மருந்துகளிலும் அழிக்க முடியாதமையால் பொதியில் அல்லது கொள்கலனில் வெளிப்பகுதியில் மற்றும் உள்ளே விற்கப்பட வேண்டிய ஆகக்கூடிய விலையை குறிப்பிடல் போன்ற பரிந்துரைகள் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போது சுகாதார மற்றும் நிதி அமைச்சுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமென தலைவரால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கையில் குடி நீர் போத்தல் உற்பத்திக்காக, உற்பத்தியாளர்கள் அதிகளவில் ஈடுபட்டிருப்பதுடன், பாவனையாளர்களிடமிருந்தும் அதற்காக அதிக கேள்வி தற்போது காணப்படுகின்றது. நாளாந்தம் 50 இலட்சம் நீர் போத்தல்கள் அளவில் சந்தையில் விற்பனையாகின்ற பொருளின் தரம் தொடர்பாக தரச் சான்றிதழொன்று இருக்க வேண்டிய போதிலும், அவ்வாறானதொன்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இந்த நியமச் சான்றிதழ் கட்டாயப்படுத்தப்படாததன் காரணமாக அப்புறப்படுத்தப்பட்ட போத்தல்கள் சேகரிக்கப்பட்டு சுத்திகரிக்கப்படாத நீர் பொதியிடப்படும் நிலைமை உருவாகியிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் பிரகாரம் நீர் போத்தல்கள் கண்டிப்பாக தரப்பரிசோதனைக்கு உட்பபடுத்தப்பட வேண்டுமெனவும், நுகர்வோரின் சுகாதார நிலைமையை பாதுகாப்பதற்காக அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட வேண்டுமெனவும் நியமங்கள் பணியகத்தின் தரச் சான்றிதழை பெற்றுக்கொள்ளுதல் என்பன கண்டிப்பாக்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(iii) எவ்வாறாயினும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஆகக்குறைந்த அளவிலேனும் பயன்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் மூலம் தரமொன்று இல்லாமல் காணப்படும் இக்கைத்தொழிலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சிறந்த மற்றும் சட்டரீதியான வியாபார வர்த்தகங்களை உருவாக்குதல் என்பனவற்றை ஆரம்ப நோக்காகக் கொண்டு "மாதிரி வியாபார நிலையங்கள்" என்ற விழுமியம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அவ்வாறான 324 விற்பனை நிலையங்களை அடையாளங் காண்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு இணையாக அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் இந்த விழுமியத்தைச் செயற்படுத்திய 66 விற்பனை நிலையங்கள் மட்டும் இனங்காணப்பட்டிருந்தன.

(உ) சந்தையில் சிறந்த போட்டியினை ஏற்படுத்துவதற்காக நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 280 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நடாத்தப்பட்ட செயலமர்வுகளில் 80% கொழும்பு, திருகோணமலை மற்றும் மாத்தறை மாவட்டங்களை மட்டும் உள்ளடக்கும் வகையில் நடாத்தப்பட்டிருந்தன.

(ஊ) 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பாக ஆணைக்குழுவொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக சட்டத்தின் 39(2) ஆம் பிரிவின் பிரகாரம் தகைமையுள்ள அங்கத்தவர்களை நியமிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

### 4.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் பயன்படுத்த முடியாது என இனங்காணப்பட்டிருந்த 82 பொருட்களை மதிப்பீடு செய்து கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் சொத்துக்கள்

அமைச்சிற்குரிய ஜீப் வண்டியொன்று 2011 ஆம் ஆண்டின் போது திருத்தியமைத்தல் மற்றும் சேவைசெய்தல் என்பவற்றிற்காக ரூபா 3,361,475 தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டிருந்ததுடன், இச் செலவுகள் முழுவதையும் மீளளிப்பதற்கு அமைச்சு நிராகரித்திருந்தது.

### 4.4 அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

உள்நாட்டு வர்த்தக திணைக்களம் மற்றும் நியாய வியாபார ஆணைக்குழு என்பன செயற்படும் காலத்தில் உருவாக்கப்பட்ட நிதியததில் காணப்பட்ட ரூபா 21,837,975 ஆன மீதியை நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபைக்கு ஒப்படைப்பது 2005 சனவரி 18 ஆம் திகதி அரச கணக்குப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.
இப்பணம் திறைசேரியால் அமைச்சினூடாக நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபைக்கு விடுவிக்கும் போது "நுகர்வோர் சேவை நிதியத்தை உருவாக்கும் போது அடிப்படையாகக் கொள்ளப்படும் நோக்கத்திற்காக இப்பணத்தைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பொன்றும் இல்லை" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதில் ரூபா 14,000,000 தொகை நிதியத்தை உருவாக்கும் நோக்கமான நுகர்வோர் கல்வி மற்றும் மேம்பாட்டிற்காகச் செலவிடப்படாமல் சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட தனியார் வாகனத்தை வழங்கியவருக்கு வாடகை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.5 ஆளணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் பதவியணியினரின் நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 08 | 07 | 01 |
| முகாமையாளர்கள் | 25 | 07 | 18 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 40 | 07 | 33 |
| நிறைவேற்று தரம் அல்லாதவர்கள் | 265 | 193 | 72 |
| ஆரம்ப தரம் | 32 | 23 | 09 |
| | 370 | 237 | 133 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மேலே காட்டப்பட்ட 133 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையால் 11 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அதில் சிரேஷ்ட ஊடக உத்தியோகத்தர், சாரதி மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் வரிசை அமைச்சின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். எனினும் அந்த உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளமாக ரூபா 684,660 தொகை அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பொது முயற்சிகள் தொடர்பான குழு கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்

2011 நவம்பர் 14 மற்றும் 15 ஆகிய இரண்டு திகதிகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முறைமையாக்கப்பட வேண்டுமெனவும் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள 08 உத்தியோகத்தர்களின் பதவிகளை 03 மாதங்களுக்குள் நிரப்ப வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை

அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை முறைப்படியாக உருவாக்கவும் பதில் கடமை வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், 03 பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எந்த ஒரு கூட்டத்திற்கும் சமூகமளித்திருக்கவில்லை.

(ஆ) ஏனைய உறுப்பினர்களும் கூட்டங்களுக்கு வருகைதருதல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன், அதில் ஒரு உறுப்பினர் நியமனத் திகதியிலிருந்து எந்த ஒரு கூட்டத்திற்கும் சமூகமளித்திருக்கவில்லை. 04 உறுப்பினர்களின் பங்குபற்றுகை 4% முதல் 25% வரையான வீச்சில் காணப்பட்டன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்துக்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(இ) மனித வள முகாமைத்துவம்

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட பொருட்களை இனங்காணலும் அதன் விலைக் கட்டுப்பாட்டு நடைமுறையும்

டப்ளியு.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் பிரகாரம் 2012.12.31 இல் முடிவுற்ற வருடத்துக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக் கூற்றுகளின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் பற்றிய தவிசாளரின் கருத்துரைகள்**

2.2 நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுப் பற்றாக்குறைகள்

அ. மீள் மதிப்பிடல் தொடர்பாக, அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகள், சொத்துகளை பிரிவாகக் கருதி தற்போது அதனை மீள மதிப்பிடல் செய்கிறது. அதன் பிரகாரம், மோட்டார் வாகனங்களுக்கு மாத்திரம் மீள் மதிப்பிடலை நாங்கள் மேற்கொண்ட வேளையில், புத்தகப் பெறுமதிக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையில் உள்ள பாரிய வேறுபாட்டைக் காண்பிக்கும். அந்த மதிப்பீடு தொடர்பில் எதிர்காலத்தில் மோட்டார் வாகனங்களுடன் மேலதிகமாக ஏனைய சொத்துகளை மீள் மதிப்பிடல் செய்வதற்கும் ஏனைய கணக்குகளை தயாரிப்பதற்குமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆ. 2013 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது.

2.2.2 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்கியொழுகாமை

அ) பந்தி 8.3.5(அ) 2013 ஜுன் 02ஆம் திகதிய PED/12 இலக்கமுடைய, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 1999.10.01 ஆம் திகதிய 22/99 இலக்கமுடைய, பொது நிர்வாக திணைக்களத்தின் சுற்றறிக்கை

22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பந்தி 1.3 ற்கும் 13/2008 இன் பந்தி 7 இன் கீழான அதன் திருத்தங்களுக்கும் இணங்க, நாங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்குமான அலுவலர்களுக்கு சம்பந்தப்பட்ட கொடுப்பனவைச் செலுத்தியுள்ளோம். நாங்கள் குழும போக்குவரத்துக்கு உரித்தான பிரதிப் பணிப்பாளர் மட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு இத்தொகையைச் செலுத்தினோம். மேலும், குழும போக்குவரத்தை வழங்குவதிலும் பார்க்க அதிகாரசபைக்கு குறைந்த செலவான ரூபா. 7,500.00 கொடுப்பனவையும் செலுத்தினோம்.

பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 1.3 மற்றும் அதன் 13/2008 ஆம் இலக்க திருத்தம் ஆகியவற்றின் பிரகாரம், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்குமான பிரதிப் பணிப்பாளர் மட்ட நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோரின் வதிவிட தூரம் 50 கிலோமீற்றர்களுக்கு மேல் அதிகரிக்காவிடில், அவர்கள்

வதிவிடத்திலிருந்தும், வதிவிடத்திற்கும் குழும போக்குவரத்துக்கு உரித்துடையவர். அதன் பிரகாரம், அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர்கள் குழுமப் போக்குவரத்திற்கு கோரிக்கை விடுத்திருந்த போதிலும், மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்கள் காரணமாக, பல்வேறு பகுதிகளுக்கு குழும போக்குவரத்தை வழங்குவது சாத்தியப்படக்கூடியது அல்ல. ஏனெனில், அது மிகவும் செலவுமிக்கதாகும். அதன் பிரகாரம், அதிகாரசபையில் உள்ள பிரதிப் பணிப்பாளர் மட்ட 05 அதிகாரிகளுக்கும் தலா ரூபா. 7,500/00 தொகையைச் செலுத்துவதற்கு சபை அங்கீகரித்துள்ளது. குழுமப் போக்குவரத்தை வழங்குவதிலும் பார்க்க கொடுப்பனவொன்றைச் செலுத்துவது இலாபகரமானதால், CAA/HRA/60/2012AOB-0606 மற்றும் CAA/HRA/60/2012/AOB-09-02 இலக்க சபை பத்திரங்களின் பிரகாரம் சபை தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. மேலும், நாங்கள் மேலதிக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறோம்.

ஆ. நிதி திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்ட 2010 டிசெம்பர் 07 ஆம் திகதிய BD/GBS/130/9/12 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கை

2003 ஆம் ஆண்டு 09ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைகளுக்கிணங்க, தவிசாளர் மற்றும் 03 முழு நேர உறுப்பினர்கள் ஆகியோருக்கு வாடகைக்கு அமர்த்தப்படட வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. தற்போது, மேற்படி அதிகாரிகளுக்குப் பொருத்தமான வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபை கோரியுள்ளது. மேலும், அவை கிடைக்கப் பெற்றவுடன், நாங்கள் இந்த வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களை அகற்றிவிடுவோம்.

## 3.1 நிதி பெறுபேறுகள்

நிறுவனத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கென புதிய ஊழியர்களின் ஆட்சேர்ப்பை அதிகரித்தல் மற்றும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு செலவினங்கள் ஆகியவை ரூபா. 7,055,252.00 எனும் தொகையால் குறைக்கப்பட்டுள்ளது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

அ. சந்தை தொடர்பான திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகள்

2013 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிலிருந்து சந்தை தொடர்பான திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகளுக்கான இலக்குகளைத் தயாரிக்கும் போது, மாவட்ட அலுவலகங்களுக்கான புதிய புலனாய்வு அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதென நாங்கள் உய்த்தறிந்து கொண்டோம். அதன் பிரகாரம், இரண்டாம் காலாண்டின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்துக்குமான திடீர் சோதனைகளை மேற்கொள்வதற்கு பின்வரும் எண்ணிக்கையிலான ஊழியர்களை ஈடுபடுத்திக் கொள்வதென உய்த்தறிந்து கொண்டோம்.

| மாவட்டம் | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 03 |
| கம்பஹா | 01 |
| களுத்துறை | 04 |
| காலி | 04 |
| மாத்தறை | 03 |
| ஹம்பாந்தோட்டை | 03 |
| கண்டி | 02 |
| நுவரெலியா | 02 |
| யாழ்ப்பாணம் | 04 |
| வவுனியா | 02 |
| மன்னார் | 03 |
| கிளிநொச்சி | 03 |
| முல்லைதீவு | 03 |
| திருகோணமலை | 02 |
| அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 03 |
| குருநாகல் | 01 |
| புத்தளம் | 03 |
| பதுளை | 04 |
| மொனராகல | 02 |
| அநுராதபுரம் | 01 |
| பொலநறுவை | 01 |
| இரத்தினபுரி | 04 |
| கேகாலை | 02 |

புதிய புலனாய்வு அலுவலர்கள் 2012 டிசெம்பர் மாதத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையால், 2012 ஆம் ஆண்டின் போது புலனாய்வுக் கடமைகளை மேற்கொள்வதற்கு அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமலிருந்தது. உத்தேசிக்கப்பட்ட திடீர் சோதனைகள் மற்றும் குற்றப்பணம் ஆகியவை குறைவடைவதற்கான காரணமாகும்.

பின்வரும் காரணங்களினால், சம்பந்தப்பட்ட இலக்குகளை நாங்கள் அடைய முடியவில்லை:

- 2010 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படட இலக்கு வைத்த மற்றும் தொடர்ச்சியான சந்தை தொடர்பான திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகள் காரணமாக தற்போது அனேகமான வர்த்தகர்களுக்கு பாவனையாளர் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி நன்கு தெரியும்.

- அத்துடன், அதிகாரசபையினால் (பாவனையாளர் சங்கங்களின் வலுவூட்டல் மூலமாக) வர்த்தகர்களுக்கு நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து அவர்கள் பாவனையாளர் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை அறிந்து கொண்டனர்.

- பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் அதிகரிக்கப்பட்ட செயற்பாடுகளுடன், புலனாய்வு அதிகாரிகள் விசேட திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விசேட திடீர் சோதனைகள் மூலமாக, சட்டத்தை மீறும் வர்த்தகர்களுக்கெதிராக எமது புலனாய்வு அலுவர்கள் நீதிமன்றத்தில் தோற்றமளிக்க வேண்டியுள்ளதால் தமது நேரத்தைச் செலவழித்து பின்வரும் அனேக காரணங்களினால் பலப்படுத்த வேண்டும்:

    - போட்டிக்கு எதிரான நடவடிக்கைகள் (பழக்கங்கள்)
    - பாரியளவிலான பண்டங்களின் சேகரிப்பு
    - காலாவதி திகதிகளை மாற்றிய பின் சந்தைக்கு மீள அனுப்புதல்
    - பண்டங்களைப் பதுக்கி வைப்பதன் மூலம் விநியோகத்தை குறைத்தல் (உ+ம்) ஆக:
        - மரக்கறிகளைக் கொண்டு செல்லுகையில் குறித்துரைக்கப்பட்ட பொதியிடலைச் சோதனையிடல்
    - அரிசி, உருளைக்கிழங்கு, வெங்காயம், வெள்ளைப்பூடு, கருவாடு போன்ற இதர பொருட்களின் கையிருப்பு மனித பாவனைக்கு உகந்தவையா என பரிசீலித்தல்
    - பாம் எண்ணெய்யுடன் தேங்காய் எண்ணெய் கலக்கப்பட்டுள்ளதா (அவ்வாறெனில், அவற்றை சம்பந்தப்பட்ட பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளதோடு, சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்)
    - சீமெந்து மற்றும் கட்டிட நிர்மாணங்களுக்கென உபயோகிக்கப்படும் இரும்பின் தரத்தை திடீர் சோதனையிடல்.
    - குடிநீர் போத்தல்களில் கிருமிநாசினித் தொற்று உள்ளதா என குடிநீரின் தரத்தைச் சோதனையிடல்.

- மனித நுகர்விற்கு பொருத்தமற்ற தகரத்திலடைத்த மீன் தொடர்பாக திடீர் சோதனையிடல் தொடர்பாக கூடிய நேரம் மற்றும் மனிதவலுவை அதிகரித்தல். திடீர் சோதனையிடலினளவு குறைவாக இருப்பினும், சந்தைப் பிரச்சினைகளை இனங் காண்பதோடு, சம்பந்தப்பட்ட கையிருப்புகளைச் சந்தையிலிருந்து அகற்றக்கூடியதாகவுமுள்ளது. எனவே, இம்முறைமையினால் பாவனையாளர் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

(I) கோழி இறைச்சி

2010 பெப்ரவரி 18ஆம் திகதிய 1641/48 இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் தோலுடன் கூடிய கோழி இறைச்சிக்கான அதிகூடிய சில்லறை விலை குறித்துரைக்கப்பட்ட போதிலும் தோல் நீக்கப்பட்ட ஏனைய கோழி இறைச்சி மற்றும் அதன் உடற்பகுதிகளுக்கான விலைக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. தோல் நீக்கப்பட்ட இறைச்சி தோலுடன் கூடிய கோழி இறைச்சி மற்றும் அதன் உடற்பகுதிகள் ஆகியவற்றின் பொது நிறைக்கான குறித்துரைக்கப்பட்ட விலைகள் கால்நடை வளர்ப்பு அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்றதும், இவை தொடர்பான அதிகூடிய சில்லறை விலை (MRP) ஒன்றைத் தீர்மானிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். (பொது திறைசேரியின் அறிவுறுத்தல்களுக்கிணங்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இணங்கியொழுகும்.)

ii கோழி இறைச்சிக்கான விலைகள் அகற்றப்பட்ட காலத்தின் போது, கோழி இறைச்சிக்கான விலை அதிகரிப்பு பற்றி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அறிக்கையிட்டு இருக்கவில்லை என தங்களது அறிக்கையின் தாங்கள் கூறியிருந்த போதிலும் அது பற்றி தவிசாளரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

II. பாலுணவு

- முழு ஆடைப் பால்மா

2013 சனவரி 28ஆம் திகதிய EC/E/CAA/2013 AQ இலக்க தொடர்பின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கணக்காய்வு வினாக்களுக்கு, 2013.04.12 ஆம் திகதி நாங்கள் விடையளித்திருந்தோம். எனினும், பால்மா தொடர்பாக எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கணக்காய்வு வினா தொடர்பான மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

| கம்பனி | பால்மா | அளவு | கம்பனியால் கோரப்பட்ட விலை (1) | கோரப்பட்ட விலையில் சேர்க்கப்பட்ட வரி | அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலை (2) | விலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வரி (3) | அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட விலை (w/o வரி) (4)=(2)-(3) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் கோரப்பட்ட விலைக்கிடையிலான வித்தியாசம் (5)=(4)-(1) |
|---|---|---|---|---|---|---|---|---|
| வொன்ரேரா | அங்கர் | 400 கிராம் | 316.00<br>763.00 | இல்லை<br>இல்லை | 325.00<br>810.00 | 36.80<br>92 | 288.20<br>718.00 | 27.80<br>45.00 |
| நெஸ்லே | நெஸ்பிரே | 400 கிராம் | 308.00<br>749.00 | இல்லை<br>இல்லை | 325.00<br>800.00 | 36.80<br>92 | 288.20<br>708.00 | 19.80<br>41.00 |
| மலிபன் | மலிபன் | 400 கிராம் | 298.73<br>738.33 | இல்லை<br>இல்லை | 325.00<br>810.00 | 36.80<br>92 | 288.20<br>718.00 | <br>20.00 |
| லங்கா மில்க் பூட்ஸ் | லக்ஸ்பிரே | 400 கிராம் | 285.00<br>700.00மூ | இல்லை<br>இல்லை | 325.00<br>810.00 | 36.80<br>92 | 288.20<br>718.00 | 3.20<br>18.00 மூ |

- ஆடைநீக்கிய பால்மா

ஆடைநீக்கிய பால்மாவின் விலைகள் கட்டுப்படுத்தப்படாத நிலையில் நாங்கள் ஏற்றுக் கொள்ளும் வேளையில், அது பற்றி தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வதற்கு தயாராகுகிறோம்.

III. குழந்தைகளுக்குரிய பால்மா

- 20.08.2013 – 18.08.2012 வரை 9 வருட காலப் பகுதியின்போது பால்மாவின் விலைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நாங்கள் தலையீடு செய்யவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. 2003.08.20 ஆம் திகதிய 1302/24 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்ட பின், 2007ஆம் ஆண்டில் ஜே.எல். மொறிசன் அன்ட் சன்ஸ் (வரையறுக்கப்பட்டது) மற்றும் நெஸ்லே லங்கா (வரையறுக்கப்பட்டது) ஆகியவற்றின் குழந்தைகளுக்குரிய பால்மா உற்பத்தியின் விலை தொடர்பான தீர்மானங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளோம். (தாங்கள் முன்பு எங்களுக்கு அனுப்பியிருந்த கணக்காய்வு வினா இலக்கம் மூன்றிற்குரிய அதே விடையாகும்).

- 2012 ஜூன் 18ஆம் திகதிய 1763/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் 06 கம்பனிகளுக்குரிய உரித்தான குழந்தைகளுக்குரிய பால்மாவிற்கான கட்டுப்பாட்டு விலையை நாங்கள் குறித்துரைத்துள்ளோம். எனினும், அமுல்படுத்தப்பட்ட விலை நியாயமற்றது எனும் அடிப்படையில் இந்த ஆறு கம்பனிகளில் ஒரு கம்பனி மட்டுமே பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது.

- கட்டுப்பாட்டு விலையைக் கணிக்கும் வேளையில் சந்தை விலையுடன் ஒவ்வொரு கம்பனியினதும் விலை மதிப்பீட்டை அதிகாரசபை பகுப்பாய்வு செய்து, கட்டியெழுப்பப்பட்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி அதன் புரள்வை சதவீதமாக ஆய்வு செய்தல் சரி எனக் கூற முடியாது.

- மேலும் 2012.08.18 ஆம் திகதிய 1763/4 ஆம் இலக்க விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் குழந்தைகளுக்குரிய பால் உணவிற்கான கட்டுப்பாட்டு விலையை நாங்கள் வெளிப்படுத்தினோம். மேலும், சட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், 2013 ஜூலை 10 ஆம் திகதிய 1818/11 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் மேற்படி உத்தரவை நீக்கிவிட வேண்டியிருந்தது.

IV. சீமெந்தின் விலைகள்

சீமெந்து பொதியிலடைக்கப்பட்டவாறு பொதுமக்களால் பாவிக்கப்படாமையால், மொத்த அளவிலான சீமெந்தின் விலையைக் கண்காணிப்பது முடியாத விடயமாகும். எனினும், மொத்த அளவிலான சீமெந்து நிர்மாண வேலைகளுக்காக நேரடியாக வழங்கப்படுகிறது. திறந்த சந்தையில் 50 கிலோகிராம் எடையுடைய சீமெந்துப் பை கிடைக்கப் பெறுவதனால், விலை ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படலாம்.

மொத்த அளவில் சீமெந்து கொள்வனவானது பாரியளவிலான நிர்மாண வேலைகளுக்கு பயன்படுகிறது. மேலும் இவ்விலை சீமெந்தின் பெறுவிலையைப் பாதிப்பதனால், தேவையேற்படின் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதனை ஆராய்ந்து பார்க்கும்.

V. கோதுமை மா

பாவனையாளர் அலவல்கள் அதிகாரசபையின் உத்தரவின்றி விலைகளை அதிகரிக்கும்போது நாங்கள் சட்ட நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

VI. திரவப் பெற்றோலிய வாயு (LPG)

விலைகள் குறைக்கப்பட்டிருப்பினும் எரிவாயுவை பழைய விலையில் விற்பனை செய்யும்போது திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. உலக சந்தையில் எரிவாயுவின் விலை குறைவடையும்போது, விலைச் சூத்திரத்தைப் பாவித்து விற்பனை விலையைத் தொகுக்கையில், கடைசி விற்பனை விலையும் குறைவடைகிறது. எனவே, சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் கீழ், பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு அவற்றை அனுப்ப வேண்டியதில்லை.

- லப்காஸ் கம்பனிக்கென நீதிமன்றினால் கட்டளையிடப்பட்ட விலைச்சூத்திரம் (குறியீடு)
- லிற்றோ கம்பனிக்கென ஷெல் கம்பனியுடன் இணங்கிய விலைச்சூத்திர குறியீடுகள் கையிருப்புகளை ஒப்பிடாது இந்த இரண்டு விலைக்குறியீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்பு சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திரகரிப்பு நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அளவைப் பாவித்து திண்ம வாயுவின் அளவிற்காக முன்னைய இரண்டு மாதகால பகுதிக்காவும் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவின் அளவிற்கு செலவினங்களைச் சேர்ப்பதனால் மீதியான அளவிற்குமாகும்.

அதன் பிரகாரம், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட எரிவாயுவின் கையிருப்பு மீதி இல்லை.

மேற்சொன்ன சூத்திரங்கள் (குறியீடுகள்) பிரகாரம் கையிருப்புகளை ஒப்பீடு செய்ய வேண்டியதில்லை.

VII. ஔடதங்கள் (மருந்து வகைகள்)

பிறிதொர பிரிவின் கீழ் அதிகூடிய சில்லறை விலையைத் தீர்மானிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரித்து அதற்கான விலையை மதிப்பீடு செய்திருந்த போதிலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து சம்பந்தப்பட்ட அங்கீகாரம் எங்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

எனினும், ஔடதங்களுக்கு விலையிடல் (விலை குறித்தல்) தொடர்பாக முன்னேற்றம் காணப்படவில்லை எனக் கூறுவது சரியன்று. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிகூடிய சில்லறை விலையைக் குறித்தல் பற்றி இறக்குமதியாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் உரிய பொறுப்பை வழங்கும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமாகும் முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளையில் ஔடதங்களின் விலைக் கட்டுப்பாடு சுகாதார அமைச்சினால் மேற்கொளள்ளப்படுகிறது. இவ்விடயம் பற்றி அவர்களுடன் பல்வேறு கலந்தாராய்வுகளை நாங்கள் மேற்கொண்டு வருவதுடன் முதல் நடவடிக்கையாக, விலையைக் குறித்தல், அத்தகைய விலைப்பட்டியல்களைப் பெற்றுக் கொள்ளல், சந்தையில் கிடைக்கப் பெறாத ஆனால் பதிவு செய்யப்பட்ட ஔடதங்களை இனங்காணல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மேலும் பாவனையாளர் அலவல்கள் பேரவையின் 10வது சிபார்சுக்கு இணங்க மேற்படியானவற்றை நடைமுறைப்படுத்தும் போது சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றிடமிருந்து நாங்கள் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(i, ii, iii) போத்தலில் அடைக்கப்பட்ட நீர் தொடர்பாக பரிசீலித்து இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் தரச் சான்றிதழ்களை வழங்கும்போது அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஆய்வுகூட வசதிகளை உறுதி செய்துகொள்ள வேண்டும். இது பற்றி நாங்கள் தற்போது விசாரித்துள்ளோம்.

ஈ. மாதிரிக் கடைகளை அறிமுகப்படுத்துதல்

மதிப்பீட்டு செயன்முறைகளின் அடிப்படையில் விசேட தகவுதிறன் மூலமாக மாதிரிக் கடைகளின் தெரிவு நடாத்தப்படுகிறது. வழங்கப்பட்ட காவுதிறனுக்கு இணங்க எமது அலுவலர்கள் கடைகளை மீள்பரிசீலனை செய்வர். இவ்வேலையானது மனிதவலுவின் கூடிய நேரத்தை உபயோகப்படுத்துகிறது.

எனினும், தேசத்திற்கு மகுடம் எனும் கண்காட்சி நடைபெறும் அதேவேளை அதிகாரசபையானது அநுராதபுர மாவட்டத்தில் 2,641 கடைகளைப் பரிசீலித்து 66 மாதிரிக் கடைகளை இனங்கண்டுள்ளது. தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடைபெறுவுள்ள ஏனைய மாவட்டங்களிலும் இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரசபை எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

உ. வர்த்தகர்களுக்கான செயலமர்வுகள்

(i) 2012ஆம் ஆண்டின் போது 177 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கென அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் கொழும்பு, மாத்தறை, கண்டி, திருகோணமலை, நுவரெலிய, புத்தளம், வவுனியா, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, மாத்தளை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்ட, அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, குருநாகல், கேகாலை ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன.

(ii) எதிர்காலத்தில் இத்தகைய செயலமர்வுகளை நடாத்துவதற்கென கம்பஹா, களுத்துறை, காலி, மொனராகல மாவட்டங்களில் உள்ள அதிகாரசபைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(iii) யாழ்ப்பாணம், மற்றும் வவுனியா மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களின் கோரிக்கைக்கு இணங்க, இந்த இரண்டு மாவட்டங்களிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின்போது பின்வரும் பாவனையாளர் சங்கங்களைத் தாபிப்பதற்கென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது:

| மாவட்டம் | தாபிக்கப்பட்ட பாவனையாளர் சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 06 |
| மாத்தறை | 01 |
| யாழ்ப்பாணம் | 01 |
| வவுனியா | 34 |
| கேகாலை | 01 |
| மட்டக்களப்பு | 07 |
| இரத்தினபுரி | 03 |
| கம்பஹா | 01 |
| திருகோணமலை | 06 |

அதன் பிரகாரம், 2012 ஆம் ஆண்டின்போது, மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 60 பாவனையாளர் சங்கங்களை, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தாபித்துள்ளது. மாவட்டமொன்றில் வரையறுக்கப்பட்ட அவலுவலர்கள் உள்ளதால், அவர்கள் சந்தை புலனாய்வுகள் மற்றும் திடீர் சோதனைகள், பாவனையாளர் முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தல், பாவனையாளர் / வர்த்தகர் விழிப்புணர்வு, பாவனையாளர் சங்கங்களைத் தாபித்தல், சந்தை ஆய்வு, மாவட்ட அலுவலகங்களில் தரவுகளை இற்றைப்படுத்தல் ஆகிய சகல கடமைகளையும் அவர்கள் கவனிக்க வேண்டியுள்ளது. வாகன வசதிக்கு மேலதிகமாக, எரிபொருள் வரையறை

உள்ளதால் பாவனையாளர் சங்கங்களை உருவாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் சொல்லப்பட்ட மாவட்டங்களில் பாவனையாளர் சங்கங்களைத் தாபிப்பதற்கென நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(iv) பாவனையாளர் சங்கங்களைத் தாபித்தல்

பாடசாலை பாவனையாளர் வட்டங்களைத் தாபித்தல் என்பது பாவனையாளர் அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய கருத்திட்டமாகும். 2012 ஆம் ஆண்டின் போது கொழும்பு மாவட்டத்தில் 4 பாடசாலை வட்டங்களைத் தாபிப்பதற்கு நாங்கள் எதிர்பார்த்த போதிலும் அம்மாவட்டத்தில் 13 பாடசாலை வட்டங்களை ஆரம்பத்தில் தாபிக்கக்கூடியதாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, அதே வருடத்தின்போது 27 பாடசாலை பாவனையாளர் வட்டங்களை திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பிக்கக்கூடியதாகவும் இருந்தது. எனினும், கிடைக்கப்பெறும் மூலவளங்களுக்கு இணங்க, ஏனைய மாவட்டங்களிலும் பாவனையாளர் வட்டங்களைத் தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

ஊ. பேரவைக்கு உறுப்பினர்களை நியமித்தல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 39(2) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு விடய அமைச்சருக்கு தத்துவம் உண்டு.

## 4.2 பாவனையற்று மற்றும் குறைபாவனையுடைய சொத்துகள்

நாங்கள் இந்த சொத்துகளை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டுக் கம்பனி ஒன்றிற்கு அவற்றை மதிப்பீடு செய்வதற்காக அனுப்பி வைத்துள்ளோம். அறிக்கை கிடைக்கப்பெற்ற பின் அவற்றை விற்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்வோம்.

## 4.3 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள அதிகாரசபையின் சொத்துகள்

முழுத்தொகையை மீளப்பெறுதல் தொடர்பாக அமைச்சு அங்கீகரிக்காமையை ஏற்றுக் கொள்ள முடியாது. 2013.03.12 ஆம் திகதிய CIT//2/m%$1$16 இலக்க கடிதத் தொடர்பின் கீழ் கிடைக்கப்பெறும் மூலவளங்களின் வரையறையினுள் இத்தொகையைச் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

## 4.4 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பயனுறுதிமிக்க போட்டியை ஊக்குவித்தல் மற்றும் பாவனையாளரைப் பாதுகாத்தல் உள்ளக வர்த்தகத்தை ஒழுங்காக்குதல், பாவனையாளர் அலுவல்கள் பேரவையைத் தாபித்தல், 1987 ஆம் ஆண்டில் 01ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 173) ஆகியவற்றை நீக்குதல் மற்றும் இதனுடன் தொடர்புடைய அல்லது இதனகத்து ஒப்பான சகல விடயங்களுக்குமென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையை நிறுவுதல் என பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 1ஆம் பிரிவு கூறுகிறது.

அதன் பிரகாரம், அமுல்படுத்திய சகல சட்டங்களையும் நீக்கும் அதேவேளையில் 2003 ஆண்டின் 09ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட தத்துவங்களை பலப்படுத்த வேண்டும். பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 49(2)(இ) பிரிவின் கீழ் நிதியிலிருந்து செலுத்தப்படும் இச்சட்டத்தின் கீழ், பணம் என்பது, வழக்குகளை முடிவுறுத்தும்போது தமது தத்துவங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான செலவினங்களை அதிகாரசபையும் பேரவையும் ஏற்றுக்கொள்ளுதல் என பொருள்படும்.

அதன் பிரகாரம், ரூபா. 21,837,975.00 விலிருந்து பணம் அரசாங்க கணக்குகளின் பணிப்பாளர் நாயகத்தினால் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு 2005 ஜனவரி 08ஆம் திகதி மாற்றப்பட்டது. சட்டத்தின் பிரகாரம் நாங்கள் ரூபா. 14,000,000.00 யைச் செலவழித்துள்ளோம். விசேடமாக, இப்பணத்தை அதிகாரசபையின் பிரதான நோக்கங்களான சந்தை தொடர்பான திடீர் சோதனைகளை மேற்கொள்ளுதல், பாவனையாளர் அறிவூட்டல் அவை தொடர்பான கடமைகளுக்கு (நீதிமன்றிற்குச் செல்லுதல்) போக்குவரத்து வசதிகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு உபயோகிக்கிறோம்.

அதன் பிரகாரம், இலக்கு வைத்த நோக்கங்களுக்காக பாவனையாளர் நிதியைத் தாபிக்கும்போது ''இப்பணத்தை உபயோகிக்கும் விடயத்தில் திறைசேரியிலிருந்து மறுப்பு இல்லை'' என்பதால் கருதப்படுவது யாதெனில், ஏற்கனவே சொல்லியிருந்த இரண்டு சட்டங்களினதும் நோக்கங்களும் தத்துவங்களும் புதிய சட்டத்திலிருந்து செயற்படும் என்பதாகும். எனவே, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் அதிகாரமின்றி இவற்றை கொடுக்கல் வாங்கலாக அறிமுகப்படுத்துவது நியாயமற்றது.

## 4.5 பணியாட்டொகுதி நிருவாகம்

அ. 2013.01.04 ஆம் திகதிய DMS/E4/41/5/2551-Vo 1 ஆம் இலக்க அங்கீகாரக் கடித மூலம் அலுவலர்களுக்கு வேண்டப்படும் தகைமைகளுக்கிணங்க, தாபனக் கோவையின் நடைமுறைகளுக்கிணங்க, சம்பந்தப்பட்ட பதவிகளை நிரப்பும்போது அதிகாரசபை செயற்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இற்றைவரை 108 வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 73 விண்ணப்பதாரிகள், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன்

நியமிக்கப்பட்டுள்ளனர். தராதரமுடைய அலுவலர்கள் 15 பதவிகளுக்கு சமுகமளித்திருக்காமையால், அப்பதவிகள் இற்றைவரை வறிதாக்கப்பட்டுள்ளது. 09 பதவிகளுக்கென நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் பெறுபேறுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. உதவி/ பிரதிப் பணிப்பாளர் வலயம்/ பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் இற்குத் தேவையான 11 அலுவலர்களை உள்வாங்குவதற்கென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இற்றைவரை வெற்றிடமாகவுள்ள ஏனைய பதவிகளுக்கு, அதிகாரசபைக்கு தேவைப்படும் சேவைகளின் தேவை முன்னுரிமைக்கு இணங்க, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதும் சொல்லப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

ஆ. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியல் அலுவலர்களுக்கான ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோரின் சேவைகள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளை அவர்கள் முடிவுறுத்தியதும் உடனடியாக அவர்களின் சேவைகள் இரத்துச் செய்யப்படும்.

## 5. வகைப் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லாட்சி

### 5.1 அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்தாமை

### 5.2 பணிப்பாளர் சபையின் கூட்டங்கள்

மாதாந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் உறுப்பினர்களின் பங்கேற்பு தொடர்பாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்குத் தெரியப்படுத்தியிருப்பதோடு, அவரே சபை உறுப்பினர்களை நியமிக்கிறார்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்



றூமி மர்ஸூக்

தவிசாளர்